Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror





ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி... (சிவபுராணம்)

வெள்ளிக்கிழமை மார்ச் 08, 2024 | ஒளி: 09 கதிர் 208 | பக்கம்:07 | ★ நகரப்பதிப்பு | FREE | FRIDAY, MARCH 8, 2024

காணிகள் விடுப்பு விவகாரம்

# ‘லீசிங்’ முறையை ஏற்கோம்



**கோட்டாபய நாட்டை வங்குரோத்துக்கு தள்ளிவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார்**

**தற்போது வெளிநாட்டு அரசியல் சூழ்ச்சி என்று புத்தகம் எழுதுகிறார்**

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் 2022ஆம் ஆண்டு முதல் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறோம். அவர் குறிப்பிட்ட விடயங்களையே திரும்ப திரும்ப பேசுகின்றார். ‘லீசிங்’ முறையில் காணிகள் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி கூறுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், தமது சொந்த காணிகளையே எம் மக்கள் கோருகிறார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா.சாணக்கியன் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## அப்படியும் இப்படியும் சொல்கிறார் அலி சப்ரி



இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு காணப்படாமல் நாட்டை சரியான திசையில் எவராலும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. அதேவேளை, அதிகார பகிர்வு இல்லாமல் நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் நிரந்தர தீர்வும் காண முடியாது. சமஷ்டி தீர்வை கோருவதற்கான உரிமை தமிழ் மக்களுக்கு உள்ளது. தொடர்ச்சி P2

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## பின்னடிப்பது ஏன்?



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை அறிக்கையின் படி பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசு பின்னடிப்பது ஏன் என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான காவிந்த ஜயவர்தன கேள்வி எழுப்பினார். தொடர்ச்சி P2



## மீள் இணைப்புக்கான கட்டணம் குறையும்

துண்டிக்கப்பட்ட மின்சாரத்தை மீள இணைக்கும் போது அறவிடப்படும் மேலதிக கட்டணம் 1,300 ரூபாயிலிருந்து 800 ரூபாவாக குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, புதிதாக மின் இணைப்பைப் பெற்றுக்கொள்ளும் சேவை கட்டணத்தில் 25 சதவீதத்தை முதல் கட்டமாகவும், மிகுதி கட்டணத்தைத் தவணை அடிப்படையிலும் செலுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். தொடர்ச்சி P2

## ‘பராடே’யை மீறினால் நடவடிக்கை எடுக்கும்


**வெவ்வேறு காரணங்களுக்காக இந்த சட்டம் உருவாக்கப்பட்டது**



அரசாங்கம் ‘பராடே’ சட்டத்தை இடைநிறுத்தியுள்ள போதும், அது தொடர்பான நடவடிக்கைகளைப் பின்பற்றாத வர்த்தக வங்கிகள் தொடர்பில் உரிய கண்காணிப்புகளை மத்திய வங்கி மேற்கொள்ளும் என அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்த அமைச்சர், மேலும் கூறுகையில், தொடர்ச்சி P2

## “தனது யோசனையை நிராகரித்தது தமிழ் தேசியக் கூட்டமைப்பு”



தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் தீர்வுகளை வழங்க முடியும். ஆனால், அதிலுள்ள பொலிஸ் அதிகாரம் தொடர்பில் தற்போது பேச முடியாது. பேசினால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாதென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், வலிகாமம் வடக்கிலுள்ள மக்களின் காணிப்பிரச்சினைகளுக்கு ‘லீசிங்’ அடிப்படையில் தாற்காலிகத் தீர்வு காண வைத்த யோசனையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு அடியோடு நிராகரித்தது எனவும் குறிப்பிட்டுள்ளார். தொடர்ச்சி P2

## என்மீது தாக்குதல் நடத்த முயற்சி

**ரோஹித எம்.பி மீது சாணக்கியன் புகார்**

அரச தரப்பு எம்.பி. யான ரோஹித அபேகுணவர்தன பிரதமர் அலுவலகத்தில் வைத்து எனக்கு அச்சுறுத்தல் விடுத்து,என்மீது தாக்குவதற்கு முயற்சித்தார். இதனால் பாராளுமன்றத்தில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது .ஆகவே இச்சம்பவம் தொடர்பில் சிறப்புரிமை மற்றும் ஒழுக்காற்று குழு ஊடாக விசாரணைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான இரா. சாணக்கியன் பிரதி சபாநாயகரிடம் வலியுறுத்தினார். தொடர்ச்சி P2

## பாதுகாப்பாக அழைத்துச் செல்ல முயன்றேன்



**இவரிடம் இந்தளவுக்குப் பயம் இருக்கும் என்பது எனக்குத் தெரியாது**

சாணக்கியன் எம்.பி.யை நான் பாதுகாப்பாக பிரதமரிடம் அழைத்து செல்லவே லிப்டுக்கு (மின்தூக்கி )அருகில் வருமாறு அழைத்தேன் என அரச தரப்பு எம்.பி.யும் முன்னாள் அமைச்சருமான ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார். தொடர்ச்சி P2

சாணக்கியனின் குற்றச்சாட்டு தொடர்பில் சிறப்புரிமை மற்றும் ஒழுக்காற்று குழு ஊடாக விசாரணைகளை உடனடியாக முன்னெடுக்க

## யானைகளுக்கு பொருளாதார நெருக்கடி

யானைகளுக்கு காட்டில் பொருளாதார நெருக்கடிகள் வந்து விட்டன. அதனால்தான் அவை நகரங்களுக்கு வந்து விட்டன. அத்துடன் எங்களின் பிரதேசங்களில் குரங்குகளின் ஆளுமை , ஆதிக்கமும் கூடியுள்ளதால் விவசாயிகள் மோசமான நிலையை அடைந்துள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## அவசர வெற்றிடங்களுக்கு அவசர நியமனம்

ஒன்பது மாகாணங்களிலும் அவசரமாக நிரப்ப வேண்டிய வெற்றிடங்களுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) சுயாதீன எதிரணி எம்.பியான ஜயந்த சமரவீர, மேல் மாகாணத்தில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் பரீட்சை நடத்தப்பட்டது. தொடர்ச்சி P2



## அனைத்து குடும்பங்களுக்கும் வீடு

கொழும்பு கஜிமாவத்தையில் வசிக்கும் அனைத்து வீடற்ற குடும்பங்களுக்கும் வீடுகளை வழங்கத் தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின் வீடுகள் வழங்கும் கொள்கைகள் மற்றும் அளவுகோல்களுக்கு அமைவாகவே இப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## ‘பராடே’ சட்டத்தால் பெரும் பாதிப்பு



‘பராடே’ சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளபோதும் வங்கிகளில் தொடர்ந்தும் அந்த சட்டத்தின் கீழ், தொழிலாளர்களின் சொத்துக்கள் ஏலத்தில் விடப்படுகிறன்றன. எனவே உடனடியாக அந்த நடவடிக்கையை நிறுத்த குறித்த வங்கிகளுக்கு எழுத்துமூலம் அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார். தொடர்ச்சி P2



## ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரியை தடுக்க முயற்சி

வவுனியா - நெடுங்கேணி வெட்டுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய இன்றைய சிவராத்திரி தினத்தை நடத்தவிடாமல் தடுக்க சில பிக்குகளின் தூண்டுதலில் நெடுங்கேணிப் பொலிஸார் ஆலய நிர்வாகத்தினரை அச்சுறுத்தியுள்ளனர். இது சிவராத்திரி தினத்தை அங்கு நடத்த அனுமதியளித்துள்ள நீதிமன்றத்தை அவமதிக்கும் நடவடிக்கை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட எம்.பி.யான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# லீசிங் முறையை ஏற்கோம்

பாராளுமன்றத்தில் (07) வியாழக்கிழமை இடம்பெற்ற வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேலை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடி ஆகியன உள்ளன. யானைகளால் விவசாய பயிர் நிலங்கள் அழிக்கப்படுவதால் விவசாயிகள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்டூர், வவுணதீவு ஆகிய பகுதிகளில் யானைகளின் ஊடுருவல் தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில் யானை -மனித மோதல் பற்றி மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் என்று குறிப்பிட்டுக் கொள்ளும் வியாபாரி பொறுப்பற்ற வகையில் பேசுகிறார்.

ஒரு இலட்சம் யானை வேலி அமைப்பதாகக் கூறிக் கொண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார். ஆனால், ஆட்சிக்காலத்தில் அவர் எதனையும் செய்யவில்லை. இறுதியில் நாட்டை வங்குரோத்துக்கு தள்ளிவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார்.

காட்டு விலங்குகளினால் விவசாயத்துக்கு ஏற்பட்ட பாதிப்பை விட கோட்டாபய ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ ஆகியோரால் இந்த நாட்டுக்கு பாரிய விளைவுகள் ஏற்பட்டுள்ளன. ஆகவே ராஜபக்ஸக்களினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்த வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் இருக்கும் போது தமிழ் தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை. தான் ஒரு தரப்பினரது ஜனாதிபதி என்ற நிலைப்பாட்டிலிருந்து கொண்டு செயற்பட்டார். தவறான நிர்வாகத்தினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதால் தோற்றம் பெற்ற போராட்டத்தைத் தொடர்ந்து நாட்டை விட்டுத் தப்பியோடினார். தற்போது வெளிநாட்டு அரசியல் சூழ்ச்சி என்று புத்தகம் எழுதுகிறார்.

நாட்டை வங்குரோத்து தள்ளியவர் என்று நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட பஷில் ராஜபக்ஷ தற்போது நாட்டுக்கு வருகை தந்துள்ளார். இவரை அழைப்பதற்கு ஆளும் தரப்பினர்கள் வெட்கமில்லாமல் சென்றுள்ளார்கள். இந்த நாடு வங்குரோத்து நிலையாகுவதற்கு பஷில் ராஜபக்ஷ பொறுப்புக் கூற வேண்டும் என்று அவர் பொருளாதார படுகொலையாளியாக உயர்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் இந்த நாட்டுக்கு ஆபத்தாகவே உள்ளது.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் செவ்வாய்க்கிழமை சபையில் மோட்டார் சைக்கிள் தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெற்றது. இதன்போது குறைபாடுகளை நான் சுட்டிக்காட்டினேன். எனது உரையைச் சுட்டிக்காட்டித் தங்கச் சங்கிலி அறுப்பதாகக் குறிப்பிடப்படும் நபர் எனது ஆடைகளைத் தலை ஊடாக கழற்றுவதாகக் குறிப்பிட்டார். இவ்வாறானவர்களை மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ததால் தான் இந்த நாடு வங்குரோத்து நிலையடைந்தது.

என்னைத் தேசத்துரோகி, புலி என்று தங்கம் அறுப்பவர் என்னை விமர்சித்தார். நாட்டு மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைக்கும் போது 7 மூளையாளர் என் று குறிப்பிடப்படும் பஷில் ராஜபக்ஸவின் சகாக்கள் எங்களுக்கு எதிராக உரையாற்றுகிறார்கள் என்றார்.

## ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில்...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) இடம்பெற்ற வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

சிவராத்திரி என்பது இந்துக்களின் முக்கியமான தினம். இந்து ஆலயங்களில் இந்த சிவராத்திரி வழிபாடு என்பது மிகவும் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அவ்வாறான ஏற்பாடுகள் வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பிரதேசத்தில் வெட்டுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்திலும் வழமையாக நடைபெறுவதுண்டு. அங்கு கடந்த சில வருடங்களாக தொல் பொருள் திணைக்களத்தின் இடையூறுகள் இருந்தாலும் கூட நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் வழிபாடுகள் நடைபெற்றுவந்த நிலையில் நாளை (இன்று )நடைபெறவுள்ள சிவராத்திரி தின நிகழ்வை குழப்பும் விதமாக நெடுங்கேணிப் பொலிஸார் ஆலய நிர்வாகத்தினரை அச்சுறுத்தியுள்ளனர். அதாவது இரவு வேளையில் அங்கு நீங்கள் தங்கி இருந்தால் உங்களை கைது செய்வோம், மின் விளக்குகள் அங்கு பொருத்தப்படக் கூடாது என்ற அச்சுறுத்தியுள்ளனர். சிவராத்திரி நிகழ்வை குழப்புவதற்கு அங்கு சில பிக்குகள் கங்கணம் கட்டி நிற்கின்றார்கள் என்றார்.

## யானைகளுக்கு....

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) இடம்பெற்ற வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், எங்களின் பிரதேசங்களில் குரங்குகளின் ஆளுமை ,ஆதிக்கம் கூடியுள்ளது. குரங்குகளின் மிக மோசமான செயற்பாடுகளினால் வவுனியா நகரப்புறக் கடைகளில் ஒரு பொருளைக்கூட வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் தமது உற்பத்திகளைப் பாதுகாக்க முடியாத படு மோசமான நிலையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். பழவகைகள் குரங்குகளினால் நாசமாகப்படுகின்றன. விவசாயிகளுக்கு சில இடங்களில் ''எயார் கன் ''வழங்கப்படுகின்றது. இது எத்தனை பேருக்கு வழங்கப்படும் எனத் தெரியாது. இதனால் குரங்குகளைக் கட்டுப்படுத்த முடியுமா என்பதும் தெரியவில்லை.

இதனை விட யானை தொல்லை. முல்லைத்தீவில் யானைத் தொல்லை அதிகரித்துள்ளது. மீள் குடியேற்றப்பட்ட மக்கள் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் உருவாக்கியுள்ள தென்னம் தோட்டங்களை யானைள் அழிக்கின்றன. யானை வேலி போடுகின்ற விஷயங்கள் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் பேசப்படுகின்றன. ஆனால், நடவடிக்கைகள் இல்லை. யானைகள் வீடு புகுந்து திருடுகின்றன. உப்பிலிருந்து மா வரைக்கும் திருடுகின்றன. இதனால் மக்கள் வீடுகளில் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பழக்கப்பட்ட யானைகளை எமது பிரதேசங்களில் இறக்கி விடுவதாக எமது மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். பழக்கப்பட்ட யானை பயப்படாது. காட்டு யானைகள் இப்படியான திருட்டுக்களில் ஈடுபடாது. பழக்கப்பட்ட யானைகள் தான் இதனைச் செய்யும். எனவே இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்.

யானைகளின் வழித்தடங்களில் வீடுகள் கட்டப்பட்டுள்ளதால்தான் இவ்வாறு நடப்பதாகக் கூறப்படுகின்றது. அது தவறு யானைகள் எல்லாம் இப்போது நகரங்களுக்கு வந்து விட்டன. நெருக்கடிகள் வந்து விட்டன என்றார்.

## மீள் இணைப்புக்கான கட்டணம் குறையும்

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் எச்.தர்மசேன எம்.பி. முன்வைத்த பொருளாதார நெருக்கடியால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 400 ரூபாய், 500 ரூபாய், 600 ரூபாய் மின்கட்டணத்தைச் செலுத்த முடியாதவர்களின் மின்கட்டணம் துண்டிக்கப்படுகிறது. மீண்டும் அவர்களுக்கு மின் இணைப்பை வழங்கும் போது 3,000 ரூபாய் மேலதிக கட்டணம் அறவிடப்படுகிறது. 400 ரூபாவை கூட செலுத்த முடியாதவர்களிடமிருந்து 3,000 ரூபாவை மேலதிகமாக கோருவது நியாயமற்றது. ஆகவே, இந்த 3,000 ரூபாய் கட்டணத்தை 500 ரூபாவாக குறைக்க வேண்டும் என்ற கோரிக்கைக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அமைச்சர் கூறுகையில்,

1,000 ரூபாவுக்கு குறைந்த மின்கட்டணம் உள்ளவர்களின் மின் இணைப்பைத் துண்டிக்கும்போது, கால அவகாசம் வழங்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளோம். நிலுவை இல்லாமல் உரிய நேரத்தில் மின்கட்டணத்தைச் செலுத்துபவர்கள் மின்கட்டணம் செலுத்துபவர்கள் ஏதாவதொரு நிலையில், மின்கட்டணத்தைச் செலுத்துவதைத் தாமதித்தால் அவர்களுக்குச் சலுகை வழங்கப்படும் என்றார்.

## தனது யோசனையை...

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் வடக்கு, கிழக்கு தமிழ் கட்சி எம்.பிக்களுக்குமிடையில் புதன்கிழமை (06) பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் நடந்த சந்திப்பிலேயே ஜனாதிபதியின் யோசனை நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ் கட்சி எம்.பிக்கள், தமிழ் மக்களின் காணிகள் விடுவிப்பு தொடர்பில் கருத்துரைத்தபோது, வலிகாமம் வடக்கிலுள்ள மக்களின் காணிகளை 'குத்தகை' (லீசிங்) அடிப்படையில் விடுவிப்பது தொடர்பில் ஆராய்வோம். என்று கூறியபோது இதனைக் கடுமையாக எதிர்த்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அந்த மக்களின் சொந்தக் காணிகளை எப்படி 'குத்தகை' அடிப்படையில் அவர்களுக்கு வழங்குவது? இது பெரும் அநீதியல்லவா? இதனை எமது மக்களோ நாமோ எப்படி ஏற்றுக்கொள்வது என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்கு ஜனாதிபதி பதிலளிக்கையில், காணிகள் விடுவிப்பு தொடர்பில் சகல பக்கங்களிலும் பிரச்சினைகள் உள்ளன. எனவே நான் அனைத்து பிரச்சினைகளையும் பார்க்க வேண்டும். எனவே முதலில் வலை வடக்கு மக்களின் காணிகளை 'குத்தகை' அடிப்படையில் அந்த மக்களுக்கு வழங்குவோம். பின்னர் அதனை அவர்களுக்கு முழுமையாக உரித்தாக்க நடவடிக்கை எடுப்போம் என்கிறார்.

எனினும் இதற்கு ஸ்ரீதரன் எம்.பி. உள்ளிட்டவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர் ..

அத்துடன், இந்த காணி விடுவிப்பு வடக்கில் மட்டுமல்ல, கிழக்கு மாகாணத்திலும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. அங்கும் பெருமளவு காணிகள், மேய்ச்சல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன அவையும் விடுவிக்கப்பட வேண்டும் என சாணக்கியன் எம்.பி. வலியுறுத்திய அதேவேளை, மன்னார் மாவட்டத்திலுள்ள காணிப்பிரச்ஹசினைகள் தொடர்பில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.யும் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டினார்.

## பாதுகாப்பாக அழைத்துச் செல்ல முயன்றேன்

வேண்டுமெனப் பிரதி சபாநாயகரிடம் வலியுறுத்தி கருத்து தெரிவித்தபோதே, ரோஹித அபேகுணவர்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பிரதமரைச் சந்திக்க வந்த தன்னை நான் தாக்க முற்பட்டதாகச் சாணக்கியன் எம்.பி கூறி சிறப்புரிமை மற்றும் ஒழுக்காற்று குழு ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினார். நான் அந்த விசாரணைக்குழு முன்பாக ஆஜராவேன் “எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. பிரதமரைச் சந்திக்க வந்த சாணக்கியனிடம்” நீங்கள் பிரதமரையா சந்திக்க வந்தீர்கள். லிப்டுக்கு வாருங்கள் அழைத்துச் செல்கின்றேன் என்றே கூறினேனே. அதாவது பிரதமரைச் சந்திக்க வந்த சாணக்கியன் எம்.பியை பாதுகாப்பாக பிரதமரிடம் அழைத்துச் செல்லவே நான் முயற்சித்தேன். ஆனால், இவரிடம் இந்தளவுக்குப் பயம் இருக்கும் என்பது எனக்குத் தெரியாது என்றார்.

## அவசர வெற்றிடங்களுக்கு...

இதனையடுத்து, நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டது.

அதற்குச் சமகாலத்தில் செயன்முறை பரீட்சை ஒன்றும் நடத்தப்பட்டது. 5,350 பேர் இதற்குத் தோற்றியுள்ளனர். அவர்களில் 2,500 பேருக்கு மட்டுமே இதுவரை நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் மேல் மாகாணத்தில் 5,305 ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன. பாடசாலைகளில் கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் மீதமானவர்களுக்கு எப்போது நியமனம் வழங்கப்படும் என்பதை கல்வியமைச்சர் சபையில் வெளிப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## அப்படியும் இப்படியும் சொல்கிறார் அலி சப்ரி

அதனை எவரும் மறுக்க முடியாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழகிழைமை (07) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான இரா.சாணக்கியன் முன்வைத்த கருத்துக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், புலம்பெயர்ந்தோர் அமைப்புகள் தொடர்பில் எமக்கு எந்த எதிர்ப்பும் கிடையாது.

எனினும் அவர்களில் ஒரு தரப்பினர் தனி அரசு தொடர்பிலேயே பேசுகின்றனர். மத்திய அரசாங்கத்தின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை அந்த நிலைப்பாடு மாற்றமடைய வேண்டும்.

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிக் கூறுவதானால் சமஷ்டி தீர்வை கோருவதற்கான உரிமை தமிழ்மக்களுக்கு உள்ளது.

அதனை எவரும் மறுக்க முடியாது. அது தொடர்பில் நீதிமன்ற தீர்ப்பும் உள்ளது. நாம் அதனை வழங்குகின்றோமோ இல்லையோ அதனைக் கோருவது அவர்களது உரிமை. அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனை வழங்குவதா இல்லையா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிப்பர் என்றார்.

## 'பராடே'யை மீறினால்...

பராடே சட்டம் புதிய சட்டம் அல்ல. பராடே சட்டம் 1990 ஆரம்பக் காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு சட்டம். அன்று வெவ்வேறு காரணங்களுக்காக இந்த சட்டம் உருவாக்கப்பட்டது.

பலரும் வங்கிகளில் கடன்களைப் பெற்றுக்கொண்டு அதை மீள செலுத்த தவறும் சந்தர்ப்பங்களில் வங்கிகளைக் கொண்டு நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பத்திலேயே இந்த பராடே சட்டம் கொண்டுவரப்பட்டது.

வங்கிகள் உரிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்ட பின்னரும் அவ்வாறான கடன்களை அறவிட முடியாமற் போனால் அந்த சந்தர்ப்பத்தில் வங்கி பணிப்பாளர்களினால் யோசனை முன் வைக்கப்பட்டு அந்த கடன்களுக்காகச் சம்பந்தப்பட்ட நபர்களின் சொத்துக்களை ஏலத்தில் விட்டு உரிய கடன் தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக இதன் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டது.

வங்கிகள் இதனைப் பின்பற்றி வந்தாலும் அரசாங்க வங்கிகள் இரண்டும் ஏனைய வர்த்தக வங்கிகளைப்போலன்றி, நெகிழ்வு போக்குகளையே கடைப்பிடித்தன என்றார்.

## பின்னடிப்பது ஏன்?

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் குறித்து காவிந்த ஜயவர்தன எம்.பி. கேள்வி எழுப்பியபோது, இந்தக் கேள்விக்கு இரண்டு மாதங்களுக்குப் பின்னர் பதிலளிப்பதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பில் சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவித்தார், இதனையடுத்தே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன தொடர்பில் சட்டமா அதிபர் ஊடாக பரிசீலனைகளை மேற்கொண்டு அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறும், பொலிஸ் ஆணைக்குழு ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நாம் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் கேள்விகளை எழுப்பும்போது, அதற்குப் பதிலளிப்பதற்கு விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சபைக்கு வருகை தருவதில்லை. அவர் சார்பில் பதிலளிப்பிற்கு இரண்டு மாதங்கள் காலவகாசம் கோரப்படுகிறது. நான் மூன்றாவது தடவையாக இக் கேள்விகளை எழுப்பியுள்ளேன்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் ஏன் பின்வாங்குகிறது என்பது பிரச்சினைக்குரியது .அறிக்கையின் பரிந்துரைகளைச் செயற்படுத்த அரசாங்கத்துக்குத் தார்மீக உரிமை உண்டு என்றார்.

## அனைத்து குடும்பங்களுக்கும் வீடு

கொழும்பு கஜிமாவத்தை வீட்டுப் பிரச்சினை தொடர்பில் புதன்கிழமை (06) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

கொழும்பு மாநகரப் பகுதிக்குள் அரசாங்கத்திற்குச் சொந்தமான, பயன்படுத்தப்படாத கட்டடங்கள் மற்றும் காணிகள் தொடர்பில் ஆராய்ந்து அந்த காணிகளை அபிவிருத்தி செய்து வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச துறையின் தலையீட்டுடன் தனியார் முதலீடுகள் ஊடாக இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், கொழும்பு நகர எல்லையில் தற்போது அமுல்படுத்தப்பட்டுவரும், அரசாங்க வீடமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி, மேலும், வீடமைப்புத் திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கியுள்ளார்.

மேலும், தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் இந்தப் பணிகள் சிரமமானதாக இருந்தாலும் பொருத்தமான முறைமையைத் தயாரிக்குமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. சத்தியானந்த, கொழும்பு மாவட்டச் செயலாளர் கே.ஜி. விஜேசிறி, கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன மற்றும் துறைசார் நிறுவன அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர்.

## 'பராடே' சட்டத்தால் பெரும் பாதிப்பு

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) விசேட கூற்றொன்றை முன்வைத்தே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் தெரிவிக்கையில்,

'பராடே' சட்டத்தை எதிர்வரும் டிசம்பர் 15ஆம் திகதி வரை தற்காலிகமாக இடை நிறுத்த அமைச்சரவை எடுத்த தீர்மானம் நடைமுறையில் செயற்படுத்தப்படவில்லை. வர்த்தக வங்கிகள் அந்த சட்டத்தின் பிரகாரம் இன்றும் நடவடிக்கை எடுத்துவருகின்றன. கடந்த வாரம் தொடர்ச்சியாகப் பத்திரிகைகளில் 'பராடே' சட்டத்தின் கீழ் கைத்தொழிலாளர்கள் பலரின் சொத்துக்களை ஏலத்தில் விடுவதற்கு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக வர்த்தக வங்கிகளே இந்த விளம்பரத்தைப் பிரசுரித்து வருகின்றன. எனவே 'பராடே' சட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மத்திய வங்கி ஊடாக இந்த வர்த்தக வங்கிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டின் வங்கி கட்டமைப்பைக் கண்காணித்து வருகின்றது. அதனால் மத்திய வங்கி ஊடாக வர்த்தக வங்கிகளுக்குச் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி, 'பராடே' சட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்த அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விடுக்க வேண்டும் என்றார்.


## என்மீது தாக்குதல் நடத்த முயற்சி

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது சபைக்குள் வந்த இரா.சாணக்கியன் எம். பி. ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்தபோது இவ்வாறு வலியுறுத்தியதுடன், மேலும் கூறுகையில்,

பாராளுமன்றத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்துக்கு நான் சற்று முன்னர் சென்றிருந்த போது அரச தரப்பு எம்.பியான ரோஹித அபேகுணவர்தன ' நீங்கள் ஏன் எங்களின் பிரதமரைச் சந்திக்க வந்துள்ளீர்கள்' என்று மிரட்டலாகக் கேட்டார். அவர் உங்களின் பிரதமர் அல்ல இலங்கையின் பிரதமர்' என்று நான் பதில் கூறினேன் .இதன்போது அவர் எனக்கு அச்சுறுத்தல் விடுத்து என் மீது தாக்குவதற்கு முற்பட்டார். முடிந்தால் லிப்டுக்கு அருகில் வா அழைத்தார் பிரதமர் அலுவலகத்தின் சேவையாளர்கள், இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த பியங்கர இதற்குச் சாட்சி சாட்சி. இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தான் என்னைப் பாதுகாத்தார்.

ரோஹித எம்.பி முறையற்ற வகையில் நடந்து கொண்டார். எமது பிரதமர் எமது பிரதமர் என்று குறிப்பிட்டுக் கொண்டு' 'நீ என்ன சொல்லுகிறாய்' என்று கேட்டுக் கொண்டு என்னை நெருங்கி வந்தார். கோட் ,சூட் போட்டிருந்தாலும் எனக்கும் சண்டித்தனம் செய்ய முடியும். ஒழுக்கத்துடன் செயற்பட வேண்டும். நாங்கள் ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறோம் என்றார்.

# “பொருளாதாரத்திற்கு தனித்துவமான பங்களிப்பை வழங்கி வரும் பெண்கள்”



பாரம்பரிய வகிபாகங்களுக்கு அப்பாற்பட்ட அறிவு, திறன் மற்றும் தொழில் தன்மையுடன் கூடிய இலங்கைப் பெண்கள் இன்று இந்நாட்டின் பொருளாதாரத்திற்குத் தனித்துவமான பங்களிப்பை வழங்கி வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், இத்தகையப் பின்னணியில் குடும்பம் மட்டுமின்றி சமூகத்திலும் பல்வேறு பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கும் பெண்கள் நாட்டின் அபிமானத்திற்குரியவர்கள்.

நிலையான அபிவிருத்திக்கான பயணத்தில் பெண்களின் பங்களிப்பை மேலும் பலப்படுத்த அரசாங்கம் தற்போது விரிவான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதோடு, டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்திற்காகப் பெண் தொழில்முனைவோரை வலுவூட்டுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

மேலும், மகளிர் தினத்தை ஒரு தினத்திற்கு மட்டுப்படுத்தாமல், புதிய சட்ட திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்கிப் பெண்களின் அபிமானம் மற்றும் பாதுகாப்பிற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், பெண்கள் மீதான பாகுபாட்டைத் தவிர்க்க, முதல் முறையாகத் தேசிய ஆண் /பெண் பாலினக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளமை சிறப்பம்சமாகும்.

தேசிய மகளிர் ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளதோடு, பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்கான இரண்டு புதிய சட்டங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தடுப்பதற்கான ஐந்தாண்டு தேசிய செயல் திட்டம் தற்போது இறுதி செய்யப்பட்டு அமைச்சரவை அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

அத்தோடு, அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கத் தேவையான சட்டத் திருத்தங்களையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. எதிர்கால சந்ததியினருக்கு மிகவும் பாதுகாப்பான மற்றும் வளமிக்க நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஒட்டுமொத்த பெண்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதோடு, சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

> **அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஒட்டுமொத்த பெண்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதோடு, சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்**

# “பெண்கள் எடுக்கும் முயற்சிகளை நாம் மறக்க முடியாது”



தாயின் அரவணைப்பு, சகோதரியின் பாசம், மனைவியின் நேசம், மகளின் அன்பு என அனைத்தையும் சமமாக அனுபவிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததால், பெண்ணின் தைரியம், பலம், உறுதிப்பாடு எப்படி இருக்கும் என்பதை முழுமையாகப் புரிந்து கொண்டேன் என்றுதான் சொல்ல வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், பண்டைய காலத்திலிருந்தே மனிதக்குலத்தின் நிலையான இருப்பானது வலுவூட்டப்பட்ட பெண்களின் வலிமையைப் பொறுத்தாக இருந்தது என்பது நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் விடயமாகும். நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 52% பெண்கள் மற்றும் அந்தப் பெண்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 29% நேரடியாகப் பங்களிக்கின்றனர். பிறந்தது முதல் பல்வேறு வகிபாத்திரங்களை ஏற்று இந்த உலகை அழகுறச் செய்யப் பெண்கள் எடுக்கும் முயற்சிகளை நாம் மறக்க முடியாது.

குழந்தையாக வீட்டையும், இளம் பெண்ணாக உலகையும், மனைவியாக குடும்பத்தையும் அழகுபடுத்தும் பெண்ணின் தவிர்க்கமுடியாத தைரியமும் வலிமையும், வீழ்ச்சியடைந்த நம் நாட்டை மீண்டும் நம்பர் 1 க்கு மீட்டெடுக்கும் பயணத்தின் உயிர்நாடியாக மாற்ற முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால், நாடு என்ற வகையில் நாம் இன்னும் பெண்களின் தைரியத்தையும், வலிமையையும் புரிந்து கொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் சொல்ல வேண்டும். பாரம்பரிய கருத்துக்கள் மற்றும் அடிப்படைக் கருத்துக்களின் பேரிலேயே நாம் இன்னும் பெண்களை நோக்குகின்றோம். இந்த மனோபாவத்திலிருந்து நாம் விடுபட வேண்டும்.

புதிய உலகிற்கு ஏற்ற அறிவு, தொழில்நுட்பம் மற்றும் பரந்த திறன்களால் பெண்கள் வலுவூட்டப்பட்டு, குடும்பம் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தின் உயிர்நாடியாகப் பெண்கள் இருக்க வேண்டும். வீட்டிலும், வீதியிலும், தொழில் புரியும் இடத்திலும் பெண்களின் அனைத்து உரிமைகளையும் பாதுகாக்க நாம் செயற்படல் வேண்டும். அப்போதுதான் உண்மையான பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

### வடக்கு ஆளுநர் பிரதமருடனான சந்திப்பில்

# நிரந்தர நியமனங்கள் வழங்குமாறு கோரிக்கை

வடக்கு மாகாணத்தில் தற்காலிக, பதிலீட்டு, சாதாரண மற்றும் தினக்கூலி அடிப்படையில் சேவையாற்றும் 388 பேருக்கான நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுத்தருமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் , பிரதமர் தினேஷ் குணவர்தனவை பிரதமரின் அலுவலகத்தில் வைத்து வியாழக்கிழமை (07) சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, வடக்கு மாகாண விவசாய அமைச்சில் பணியாற்றும் 67 பேருக்கும், உள்ளூராட்சி அமைச்சின் கீழுள்ள பிரிவுகளில் கடமையாற்றும் 321 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் .

அவசர மற்றும் அத்தியாவசிய தேவைக் கருதி சேவையில் இணைக்கப்பட்டவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும், இவர்களின் அனுபவம் மற்றும் துறைசார்ந்த திறன், அறிவை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வதினூடாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அவசர நிலைகளை ஈடுகொடுக்கக் கூடியதாக அமையும் எனவும் ஆளுநர், தெரிவித்துள்ளார்.

தற்காலிகமாகச் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள், நிரந்தர நியமனங்களைப் பெற்றுக்கொள்ளக் காத்திருப்பதாகத் தெரிவித்த ஆளுநர், அவர்களின் பெயர் பட்டியல் அடங்கிய கோரிக்கை கடிதத்தையும் பிரதமரிடம் சமர்ப்பித்துள்ளார். விசேட திட்டத்தின் கீழ் இவர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெற்றுத்தருமாறு கௌரவ ஆளுநர், பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



> **இந்த விடயம் தொடர்பில் விரைவில் சாதகமான பதிலை வழங்குவதாக பிரதமர் உறுதியளித்துள்ளார்**

இதேவேளை, ஒரு இலட்சம் வேலைவாய்ப்பின் அடிப்படையில் வழங்கப்பட்ட சிற்றூழியர் நியமனங்கள் வடக்கு மாகாணத்தில் முழுமையாக நிரப்பப்படவில்லை எனவும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார். இதனால் வடக்கு மாகாணத்திலுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த வெற்றிடங்களை நிரப்பி, சிறந்த பொதுச் சேவையை வழங்குவதற்கு ஆவணம் செய்யுமாறும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர், பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் கோரிக்கை கடிதத்தைப் பெற்றுக்கொண்ட பிரதமர் தினேஷ் குணவர்தன, இந்த விடயம் தொடர்பில் விரைவில் சாதகமான பதிலை வழங்குவதாக உறுதியளித்துள்ளார் .

# “மக்களை பாதிக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்”

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் தீவு பகுதியில் மக்களைப் பாதிக்கும் வகையில் கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்கள் அமைக்கும் நடவடிக்கைகள் மக்களின் எதிர்ப்பையும் மீறி ரகசியமாக இடம்பெற்று வருகின்றது என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் வியாழக்கிழமை (07) தெரிவித்துள்ளார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

“இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையின் காரணமாகக் கடல் வளம் சுரண்டப்படுவதினால் எமது மீனவர்கள் வாழ முடியாத நிலை காணப்படுகிறது.கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நாங்கள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்த போதும் இதற்கு எவ்வித முடிவும் கிடைக்காத நிலை காணப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாங்கள் முன் நின்று குரல் கொடுத்து வருகிறோம்.

இலங்கை கடற்பரப்பினுள்




ஆயிரக்கணக்கான இந்திய இழுவைப்படகுகள் வந்து மீன் வளங்களை அழிப்பதோடு, மீனவர்களின் சொத்துக்களும் அழிக்கப்படுகின்றது. இதனால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கை இடம் பெறுகின்றது. மன்னார் தீவைப் பாதுகாக்க மன்னார் மாவட்ட மக்கள் எம்முடன் கைகோர்த்துள்ளனர்.

வளம் நிறைந்த மன்னார் மண்ணை வளமற்ற நிலமாக மற்ற அந்நிய சக்திகள் முயற்சிக்கின்றது" என தெரிவித்துள்ளார்.

# குண்டு வெடிப்பில் ஒருவர் படுகாயம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் உள்ள வீடு ஒன்றில் குப்பைக்குள் இருந்து குண்டு வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் வியாழக்கிழமை (07) இடம்பெற்றுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

குறித்த பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்து அதன் குப்பைகளை தீயிட்டு எரித்துக் கொண்டிருந்தபோது, அதிலிருந்த கைக்குண்டு



பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியுள்ளதாகத் தெரியவந்துள்ளது .

மேலும் இச் சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த நபர் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உப பொலிஸ் பரிசோதகர் பணி இடைநீக்கம்

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - உடப்பு பகுதியில் நபர்கள் இருவர் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

புத்தளம் - உடப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி உப பொலிஸ் பரிசோதகர் தனது நண்பர்கள் சிலருடன் சேர்ந்து இருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த நிலையிலேயே, இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



# வாகன விபத்தில் ஒருவர் காயம்

நிதர்ஷன் வினோத்

பருத்தித்துறை வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த லொறியொன்று நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வளைவில் திரும்பும் போது அருகிலிருந்த கடையொன்றில் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் வியாழக்கிழமை (07) பதிவாகியுள்ளது .

இவ் விபத்தில் லொறியின் சாரதி காயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதன் போது தனியார் தொலைக்காட்சி நிறுவனமொன்று கடுமையாக சேதமடைந்துள்ளதுடன் அருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியொன்றும் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

மேலும் இச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது .



# விடயம் விளங்காமல் நேரத்தை வீணடிப்பது இப்படித்தான்

இலங்கை மத்திய வங்கி ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பு வழங்கியமை தொடர்பில் பல தரப்பினர் மத்தியில் பேசப்படும் நிலையில், பாராளுமன்றத்தில் பேசப்படும் முக்கிய விடயமாகவும் அமைந்துள்ளது.

குறிப்பாக அரச நிதி தொடர்பான குழுக் கூட்டத்தில் முன்னிலையாகிய மத்திய வங்கியின் ஆளுநர் அடங்கிய குழுவினர் சம்பள அதிகரிப்பு தொடர்பில் விளக்கங்களை சமர்ப்பித்திருந்த நிலையில், இந்த சந்திப்பு எவ்வித தீர்மானத்தையும் எட்டாமல் நிறைவடைந்திருந்தது.

சம்பள அதிகரிப்பை வழங்குவது என்பது மத்திய வங்கியின் சம்பளக் கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாக அமைந்திருப்பதாக மத்திய வங்கியின் சார்பில் தெரிவிக்கப்பட்ட போதிலும், அந்த கூட்டு ஒப்பந்தம் தொழில் அமைச்சில் பதிவு செய்யப்படாமை ஒரு பிரச்சனையாக அமைந்திருந்தது.

இந்நிலையில் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும், ஆனால் வழங்கப்பட்ட உயர்வு, குறிப்பாக இலட்சக் கணக்கில் வழங்கப்பட்ட உயர்வு என்பது ஏற்றுக் கொள்ள முடியாது. அதுவும் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியான சூழலில், மத்திய வங்கியினால் இவ்வாறான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமை ஏற்புடையதல்ல என்பதே அரச நிதி தொடர்பான குழுக் கூட்டத்தின் தலைவர் கலாநிதி. ஹர்ஷ டி சில்வாவின் வாதமாக அமைந்திருந்தது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும், அது தொடர்பில் விவாதம் நடத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பில் நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார். இந்நிலையில், இந்த விடயம் பற்றி தெளிவில்லாத அரச மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் பலர் பாராளுமன்ற நேரத்தை வீணடிக்கும் வகையில் தமது கருத்துகளை முன்வைத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

ஒவ்வொரு பாராளுமன்ற அமர்வும் பொது மக்களின் பணத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த அமர்வுகளில் மக்களுக்குப் பயனுள்ள வகையிலான விடயங்கள் பேசப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

தமக்கு ஒருவிடயம் பற்றிய போதிய தெளிவு இல்லாவிடின், அது பற்றி முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். மாறாக, கருத்து தெரிவிப்போரைத் திசை திருப்பும் வகையில் நடுவே எழும்பி உரத்த குரலில் கத்துவது என்பது பொருத்தமற்ற செயற்பாடாகும்.

பல்வேறு தரப்பினரிடமிருந்தும் மத்திய வங்கிக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படும் நிலையில், தாம் மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் வழங்கிய சம்பள அதிகரிப்பை, மீள் பரிசீலனை செய்யுமா? அதற்குச் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் ஒத்துழைக்குமா? ஊழியர்களின் மனநிலை எவ்வாறு அமையும்? இந்தக் கேள்விகளுக்கு பதில் ஒருபுறமிருக்க, மத்திய வங்கியின் பொறுப்பின் கீழுள்ள ஊழியர் சேமலாப நிதியத்துக்கு வழங்கப்படும் வட்டி வீதம் 9 சதவீதமாகக் குறைப்பது தொடர்பில் கடந்த ஆண்டில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறான மக்களுக்குப் பாதிப்பான தீர்மானத்தை மேற்கொண்டுவிட்டு, சாதாரண மக்களை விட உயர்ந்த சலுகைகளை அனுபவிக்கும் மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு இவ்வாறு உயர்ந்த தொகையில் சம்பள அதிகரிப்பு வழங்குவது உண்மையில் அந்த தீர்மானத்தை மேற்கொண்ட அதிகாரிகளின் மனசாட்சிக்குச் சரியானது தானா?

தொடர்ந்தும் இதைப்பற்றிப் பேசியே, நாட்டின் ஏனைய பிரச்சனைகள் கவனிக்கப்படாமல் இருந்துவிடுமா?

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

நினைவு அடுக்குகளில் பதிவுகள் பெருகிய வண்ணம் இருக்கின்றனவே தவிர, அவை நிகழ்ந்த பதிவுகளை அழிக்க முடியாமல் திணறுகின்றன. இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும். இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும். இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும்.

இளமைக்கால சேட்டைகள், குறும்புகள், பாசக்கார நண்பர்களுடன் ஊர் சுற்றுவது, அந்தக் காலத்தல்ஈ பாடசாலைக்கு வராமல் ஒளிந்து கொண்டிருக்கும் மாணவர்களை, எங்கள் தலைமை ஆசிரியரான ஆறுமுகம் வாத்தியார், அவர்களின் வீடுகளுக்குக் கையில் பிரம்புடன் சென்று, பெற்றோரின் முன்னிலையிலேயே பிரம்பால் அடித்து, பாடசாலைக்கு அழைத்துக் கொண்டு செல்வார்.

இப்போது நினைத்தாலும் அந்ப் பசுமை மிகு எண்ணங்களிலிருந்து மீளமுடியாதுள்ளது. இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும்.

கோவில் திருவிழாக்கள், நாடகங்கள், கூத்துகள். கோவில் திருவிழாக்கள், எங்கள் தலைமை ஆசிரியரான ஆறுமுகம் வாத்தியார், அவர்களின் வீடுகளுக்குக் கையில் பிரம்புடன் சென்று, பெற்றோரின் முன்னிலையிலேயே பிரம்பால் அடித்து, பாடசாலைக்கு அழைத்து கொண்டு செல்வார்.

நன்றி: பருத்தியூர் பாலைவயிரவநாதன்

## கடிதங்கள்

### நிரந்தர கட்டுமானங்களுக்கு அனுமதி வழங்க வேண்டாம்

முல்லைத்தீவு - தேராவில் குளத்தின் அருகில் காணிகளைப் பிடித்திருப்பவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைக்க அனுமதிகள் வழங்க வேண்டாம் என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரிடம் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் தேராவில் குளம் காணப்படுகின்றது. 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் தற்போது குளத்தின் அணைக்கட்டு வழியாகவே போக்குவரத்துகள் நடைபெற்றன. 2010ஆம் ஆண்டில் தேராவில் குளத்தின் வழியான போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டுத் தேக்கு மர காடு வழியாக நிரந்தர பாதை அமைக்கப்பட்டது.

இவர்களுக்கு நிரந்தர கட்டுமானங்களுக்கான அனுமதிகள் பிரதேச செயலகம் வழங்கும் பட்சத்தில் தேராவில் குளத்தின் முழுமையான நீரினை வெளியேற்ற வேண்டிய அபாயம் ஏற்படும். அடாத்தாகக் காணிகளைப் பிடித்து வைத்திருப்பவர்களுக்குப் பிற இடங்களில் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தேராவில் குளத்தின் நீர் மட்டத்தினை பேணுவதன் மூலமே இப்பகுதியின் நிலத்தடி நீரினையும் பாதுகாக்க முடியும் எனவும் இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் 43:

# புதிய யாப்பு வைத்த ஆப்பு



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் முக்கிய அரசியல் நிகழ்வு 1972இல் உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்பாகும். இது சுதந்திர இலங்கையை பிரித்தானிய கொலனித்துவத்தில் இருந்து முழுமையாக விடுவித்துநாட்டைக் குடியரசாக்கியது. அத்தோடு, இலங்கையின் இன முரண்பாட்டின் இன்னொரு கட்டத்தைத் தொடக்கி வைத்தது.

1972இன் புதிய குடியரசு அரசியலமைப்பானது இலங்கையின் அரசியலமைப்பாக்க வரலாற்றிலிருந்து ஒரு வகையிலான தீவிரமான விலகலாகும். விடுதலைப் போராட்டங்களின் விளைவிலான சுதந்திரமும் அதன் வழிப்பட்ட அரசியலமைப்பும் இந்தியாவுக்கு வாய்த்தது போல இலங்கைக்கு வாய்க்கவில்லை. எனவே, சுதந்திரத்துக்குப் பின்னரும் பிரித்தானிய காலனியாதிக்கத்தின் எச்சசொச்சங்கள் நிலைத்தன. நடைமுறையில் இருந்த சோல்பரி அரசியலமைப்பு இன்னும் பிரித்தானிய முடியைப் பெயரளவு அரச தலைவராக வைத்திருந்தது. இதை இல்லாமல் செய்ததன் மூலம் 1972 அரசியலமைப்பானது “இலங்கையினது” என்ற உணர்வை வழங்கியது.

சுதந்திரம் அடைந்து கால் நூற்றாண்டுக்குப் பிறபுபிறகு, 1972 அரசியலமைப்பு பலவழிகளில் தேசியவாதத்தின் அடையாளமாக வலியுறுத்தப்பட்டது. புதிய அரசியலமைப்பை அரசியலமைப்புச் சபையினால் உருவாக்கப்பட்ட ஒரு ‘தன்னியக்க’ அரசியலமைப்பாக அறிவிக்கும் அரசியல் சொல்லாட்சியில் இது வெளிப்பட்டது. பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்க, 1970 ஜூலை மாதம் பாராளுமன்றத்தில் இதை வலியுறுத்தினார். “எங்களால் தெரிவு செய்யப்பட்டு எங்களால் சுதந்திரமான, இறையாண்மை கொண்ட அரசியலமைப்புச் சபையை அமைப்பது உங்களது சவாலற்ற உரிமையாகும். இது காலனித்துவ அடிபணிதலின் தளைகளை இறுதியாகவும் என்றென்றும் அசைத்தசுதந்திரமானமக்களின் விருப்பத்தை நிறைவுசெய்வதாகும்”

ஒரு தேசிய ஒருமித்த அனைத்துக் கருத்துக்களையும் சேகரிக்கும் அணுகுமுறையை இந்த புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயன்முறை குறித்து நின்றது. எனவே, பன்முகப்பட்ட கருத்துக்களை உள்வாங்கிய ஒரு அரசியல் யாப்புக்கான வாய்ப்பு பிரகாசமாக இருந்தது. அதேவேளை, ஒருமித்த கருத்துடன் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. 1970இல் ஒரு அமோக வெற்றியுடன், ஐக்கிய முன்னணி பெற்ற ஆணையே அந்த ஒருமித்த கருத்து என அரசாங்கம் முடிவு செய்து கொண்டது. இதனால் பரந்துபட்ட கலந்துரையாடலோ, கருத்துக்கேட்போ இன்றி அரசியல் யாப்பு வரைவு தயாரானது. இதனால் அரசியல் நிர்ணய சபையின் முடிவில், எதிர்க்கட்சிகள் நடவடிக்கைகளில் இருந்து வெளிநடப்பு செய்தன அல்லது கடுமையான எதிர்ப்பைவெளிப்படுத்தின. இதன் விளைவாக, புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறை ஒரு பாரபட்சமான விவகாரமாகப் பார்க்கப்பட்டது.

ஜனநாயக அரசாங்கத்தின் எலும்புக்கூடு எஞ்சியிருந்தாலும், 1972 அரசியலமைப்பு அரசியல் நெறியாக மாறிய பண்பாட்டுத் தேசியவாதத்தின் அபிலாஷைகளைத் தெளிவாக வெளிப்படுத்துவதாக இருந்தது. இந்த பண்புக்கூறுகள் அரசியலமைப்பின் பகுதிகளாக இருந்தன, அவை பேச்சுவார்த்தைக்கு உட்பட்டவை அல்ல.

பௌத்த மதத்திற்கு ‘அதிமுக்கிய இடம்’ வழங்கப்பட்டது, சிங்களம் உத்தியோகபூர்வ மொழி ஆக்கப்பட்டது. இவை சிங்கள பௌத்த பண்பாட்டுத் தேசியவாதம் நிறுவன மயமாதலைக் குறித்தது. அத்துடன், அதற்கான அரசியலமைப்பு ரீதியான உத்தரவாதம் பல்லினபல்மத இலங்கைக்கு “சிங்கள பௌத்த” என்ற அடையாளத்தைக் கொடுத்தது.

1972 அரசியலமைப்பு பௌத்த மதத்தைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் ஒரு உறுதியான கடமையை அரசிற்கு வழங்குவதன் மூலம் பௌத்த நம்பிக்கையை அரசமதமாகப் பதிவுசெய்தது. மற்ற மதங்கள் அரசியலமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகள் என்ற அத்தியாயத்தால் மட்டுமே பாதுகாக்கப்பட்டன, எனவே அவை சில வரம்புகளுக்கு உட்பட்டன. சுதந்திரத்திற்குப் பிந்தைய சகாப்தத்தில் பௌத்தம் ஆற்றிய பங்கு, சட்டப்பூர்வமா தன்மையை பேச்சுவார்த்தைக்குட்படுத்த முடியாத அரசியலமைப்பு ஏற்பாடாகக் கண்டறிந்தது. பௌத்தம் அரசியல் அடையாளத்தின் இன்றியமையாத அம்சமாக மாறியது. பௌத்த மதகுருமார்களுக்கு இலங்கை சமூகத்தில் அதன் மரியாதைக்குரிய இடம் வழங்கப்பட்டது.

ஆயினும் கூட, 1950களின் பௌத்த மதகுருமார்களின் கிளர்ச்சி ஏற்படுத்திய பாதிப்பை நன்கறிந்திருந்தபடியால் 1972 அரசியலமைப்பு பௌத்த செல்வாக்கை அதற்குரிய விஷயங்களுக்கு மட்டுப்படுத்த முயன்றது. பர்மாவைப் போல் அல்லாமல்,அரசியல் மற்றும் பொருளாதார முடிவெடுக்கும் முறைகளில் இலங்கை மதச்சார் பற்றியதாகவே இருந்தது. மேற்கத்திய மயமாக்கலை நவீனமயமாக்கலில் இருந்துபிரிக்கும் ஒன்றாகவே சிங்கள பௌத்தத்திற்கான விருப்பம் அரசியலமைப்பின் பகுதியானது என்ற முடிவுக்குப் பல ஆய்வாளர்கள் வந்துள்ளனர். பிரதிநிதித்துவ ஜனநாயகத்துடன் பகுத்தறிவு பொருளாதார அமைப்பின் கோட்பாடுகள் ஒரு நவீன தேசிய-அரசின் ஆளுகைக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளாக உள்வாங்கப்பட்டன. பௌத்த செல்வாக்கு சமூகத்தின் கலாசார வாழ்க்கையிலும், அரசியல் சொல்லாட்சிகளுடன் இணைக்கப்பட்ட குறியீட்டிலும் மிகவும் உணரக்கூடியதாக இருந்தது.

1972 அரசியலமைப்பு பௌத்தத்தை வாழ்வின் ஒரு அம்சமாக மாற்றும் வேலைத்திட்டத்தில் ஈடுபடவில்லை. ஆனால், தேசியவாத சுதேசிய நோக்கில் பௌத்தத்திற்கு தலையாக நிலையை அளித்தது. இது காலப்போக்கில் அரசியல் வாழ்க்கை உட்பட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் பௌத்தத்தை ஒரு பகுதியாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் 1972 அரசியலமைப்பின் வரைவு பௌத்தத்தை இன்னும் குறியீட்டு அடிப்படையில் பார்த்தது. இருந்த போதிலும்,சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாகியமை,புதிய யாப்பில் சிறுபான்மையினரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை, தரப்படுத்தல்உள்ளிட்டவிடயங்கள் தமிழர்களிடையே அரசு மீதான எதிர்ப்புணர்வு திரட்சியடைவதற்கு வழிகோலின.

1972 அரசியலமைப்பு சுதந்திரமான பொதுநிர்வாகம் என்ற கருத்தைநீக்கி, நாட்டின் முழு நிர்வாக அமைப்பையும் அமைச்சரவையின் கீழ் கொண்டுவந்தது. வேகமாக வளரும் சமூகத்தில் ‘சுதந்திரம்’ மற்றும் ‘நடுநிலைமை’ சாத்தியமில்லை என்றவாதம் முன்வைக்கப்பட்டது. இவ்வளவு காலமும் பொதுச் சேவை என்பது உயரடுக்கினரின் ஒருபகுதியாகவேஅவரிதம் நலன்காக்கும் கருவியாகவே இருந்தது. இதைமாற்றி, எவ்வாறாயினும், ஜனரஞ்சகக் கூறுகளைக் கொண்ட தகுதித்துவம் என்ற கருத்தை அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக, 1972 அரசியலமைப்பானது அதிகாரத்துவத்தை அரசியல் மயமாக்குவதற்கு வழி செய்தது.

இலங்கையின் இனமுரண்பாட்டில் 1972 அரசியலமைப்பு குறிப்பிடத்தக்க தாக்கத்தை உண்டு பண்ணியது. இதற்குப் பலகாரணிகள் பங்களித்தன. தமிழரிற் பெரும்பாலோரது தாயகமான யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளாதாரம் நீண்ட காலமாகவேகுடா நாட்டுக்குவெளியே சிறுவணிகத்தின் மீதும்,அரசதுறை சம்பளங்களின் மீதே தங்கியிருந்தது. அதனாலேயே அது “மணிஓடர்” பொருளாதாரம் என்று அறியப்பட்டது. அரச தொழில்களை வழங்குவதிலும், கல்வியிலும் கடைப்பிடிக்கப்பட்ட ஒழுங்கு முறையான பாரபட்சத்தின் பயனாக அரசாங்க ஊழியர்களாகத் தமிழரின் விகிதாசாரம், சனத்தொகைக்கு உரியதைவிடக் குறைந்தது.

1950கள் தொட்டுத், தென்னிலங்கையில் அரசநிதியுடனும் அந்நிய“உதவியுடனும்’ பெரிய, நடுத்தர அளவிலான தொழில்கள் நிறுவப்பட்ட போதும்,வடக்கிலும் கிழக்கிலும் குறிப்பிடத்தக்களவில் தொழிற்சாலைகள் நிறுவப்படவில்லை. கிழக்கிலே நிறுவப்பட்ட தொழில்கள் சிங்களக் குடியேற்றங்களை ஊக்குவிக்கும் நோக்குடையனவாய் இருந்தன.

1970களில் ஏற்பட்ட எண்ணெய் நெருக்கடியின் பயனாகவும், அரசாங்கம் ஒரு அந்நியச் செலாவணிப் பிரச்சினையை எதிர்நோக்கியது. எனவே பல அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியையும்,உள்நாட்டில் பயிரிடக்கூடிய மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு உட்பட்ட விவசாய உற்பத்திகளின் இறக்குமதியையும் கட்டுப்படுத்த நேரிட்டது. இதன் பயனாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் விவசாய உற்பத்தி பெருகியது. முதன்முறையாக, சிறு உற்பத்தியாளர்களின் பொருளாதாரம் சற்று வசதியானதாயிற்று. அதன் தொடர்ச்சியாக விவசாய நிலத்திற்கான வேட்கை ஏற்பட்டது. குடாநாட்டிலிருந்த பலரும், குடாநாட்டிற்குத் தெற்கே உள்ள நிலத்தைப் பயன்படுத்தும் நோக்குடன் குடாநாட்டை விட்டு வெளியேறினர். இதில் கவனிக்க வேண்டியது யாதெனில், நிலம் பற்றிய அரசியல் விழிப்புணர்வு தமிழ் மக்களிடையே ஏற்பட்டது பொருளாதார யதார்த்தத்தின் பயனாகவேயன்றித் தமிழ்த் தேசிய உணர்வாலல்ல.

அரசியலமைப்பு ரீதியான ஒடுக்குதல்கள் தவிர்க்கவியலாமல் எதிர்ப்புணர்வுகளைத் தமிழர் மத்தியில் உருவாக்கியது. இதைத் தேர்தலில் தோற்றுத் துவண்டு போயிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்த எண்ணி உணர்ச்சிகர தமிழ்த் தேசியவாத அரசியலை முன்னெடுத்தது. அதன் வழிப்பட்டு ஆதரவளிக்கப்பட்ட வன்முறைக் கலாசாரம் மூன்று தசாப்தங்களுக்கு மேல் தொடர்ச்சியாக இரத்த ஆறு ஓடுவதற்கு வழிவகுத்தது.

# Airtel வாடிக்கையாளரின் இணைய அனுபவங்களை மேம்படுத்தியுள்ளது

உள்ளடக்க விநியோகவலையமைப்பு (Content delivery network - CDN) சேவை வழங்குநரான 'Deta Limited' உடனான தொலைத்தொடர்பின் முக்கிய கூட்டாண்மையைத் தொடர்ந்து Airtel Lanka பாவனையாளர்கள் குறிப்பிடத்தக்க வகையில் சீரான மற்றும் வேகமான மொபைல் இணைய அனுபவத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கூட்டாண்மை மூலம், Airtel Lanka இப்போது DetaCamp இன் CDN77 Caching Platform ஐ - வன்பொருள் மற்றும் மென்பொருள் தீர்வுகள் உட்பட, அவர்களின் மாளிகாவத்தை மற்றும் கடவத்தை தரவுமையங்களில் - 60Gbps வரையிலான Traffic ஐ கூட்டாககையாளும் திறனை அவர்களுக்கு வழங்குகிறது.

CDN77 தரவுமையங்கள் மற்றும் Airtel Lanka போன்ற சில மொபைல் செயற்பாட்டாளர்கள் மத்தியில் Cache Platform களை உலகம் முழுவதும் பயன்படுத்துகிறது. இதன் விளைவாக, இறுதிப் பாவனையாளர்களின் சாதனங்களுக்கு நெருக்கத்தை ஏற்படுத்துகிறது, இதன் விளைவாக வாடிக்கையாளர்களுக்கு வேகமான, மென்மையான மற்றும் நம்பகமான வலையமைப்பு தர அனுபவங்கள் கிடைக்கும் தகவல்மையமாக இது அமையும்.

"Airtel Lankaவில், எங்களின் வாடிக்கையாளர்களுக்கு மதிப்பை அதிகரிப்பதற்கான புதிய வழிகளை நாங்கள் தொடர்ந்து தேடுகிறோம். எங்களின் Physical Network உள்கட்டமைப்பில் முதலீடு செய்வதோடு, Airtel நடவாடிக்கையாளர்களுக்கு நாங்கள் வழங்கக்கூடிய மதிப்பை மேலும் மேம்படுத்த, Tech - Telco சுற்றுச் சூழல் அமைப்பில் உள்ள மற்றவர்களுடன் உத்திரீதியாக பங்குதாரர்களாகவும் ஒத்துழைக்கவும் நாங்கள் ஆர்வமாக உள்ளோம்.

"Deta Camp உடன் இணைந்து CDN77 Platform ஐ நாங்கள்வெளியிடுவது இந்த அணுகுமுறையின் மற்றொரு எடுத்துக்காட்டு, மேலும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் மொபைல் இணைய அனுபவத்திற்கு குறிப்பிடத்தக்க ஊக்கத்தை வழங்குவதுஉறுதி" என்று Airtel Lanka CEO/MD, அஷிஷ் சந்திரா கூறினார்.

இயங்குதளமானது, ஒரு தரவுமையம் செயலிழந்தாலும் செயல்படக்கூடிய கட்டமைப்புடன் வருகிறது - இது மற்றொரு தரவுமையம் தடையின்றி பொறுப்பேற்க அனுமதிக்கிறதுஇ மற்றொன்று மீண்டும் இணையத்திற்கு வரும்வரை இது நெட்வொர்க் முழுவதும் அதிக நெகிழ்வுத் திறனையும் ஸ்திரத்தன்மையையும் வழங்குகிறது.

வாடிக்கையாளர்களால் உருவாக்கப்படும் Traffic CDN77 தகவல் சேமிப்புதளத்தின் ஊடாகசேனலாக அமையும். கோரப்பட்ட உள்ளடக்கம் கோரப்படும் நேரத்தில்கிடைக்கவில்லை என்றால், தளம்சரியான Host இருப்பிடத்திலிருந்து இந்த உள்ளடக்கத்தை கேட்டு, Airtel Cache Platform ஐபுதுப்பிக்கும். இதன்மூலம், பாவனையாளர்கள் இனிவரும் நேரங்களில் Cache மூலம் உள்ளடக்கத்தை மிகவும் திறமையாக அணுக அனுமதிக்கும்.

அதாவது, திரைப்படங்கள், இசை, விளையாட்டுமற்றும் கல்வி உள்ளிட்டதங்களுக்குப் பிடித்தமான மற்றும் தேவைக்கேற்ப ஆன்லைன் மீடியாக்களுக்கு வாடிக்கையாளர்கள்அதிவேகமாக அணுக முடியும். உலகளவில் உலகின் மூன்றாவது பெரிய மொபைல் செயற்பாட்டாளரான Bharti Airtelலிலிருந்து வரும் ஏற்கெனேவே முன்னணி தொழில்நுட்ப நன்மைகளுக்கு, கடுமையாக மேம்படுத்தப்பட்ட சேவை தரம் மற்றும் செயல்திறனுடன், யுசைவநட போட்டியைத் தாண்டி முன்னேறவும் இது உதவும்.

Airtel குறைந்தபட்சம் 56 சதவீத Subscriber Trafficற்கு உள்ளூர் Cache Platform அகளை நம்பியுள்ளது. இது சந்தேகத்திற்கு இடமின்றி ஒட்டுமொத்த பாவனையாளர் அனுபவத்தை மேம்படுத்தும், அதேவேளையில் சர்வதேசஅலைவரிசைமற்றும் அதனுடன், கூடியகட்டணங்களின் தேவையைகுறைப்பதன் மூலம் அந்நிய செலாவணியைப் பாதுகாக்க உதவுகிறது.

# கொமர்ஷல் வங்கி IFC உடன் இணைந்து 27 ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தது





கொமர்ஷல் வங்கி 2023ஆம் ஆண்டில் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடன் (IFC) இணைந்து நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு (MSMEs) 27 ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியுள்ளது. ஆளுஆநு வர்த்தகங்களுக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் தரமான வடிவமைப்பைப் பயன்படுத்தி இச்செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நீர்கொழும்பு, இரத்தினபுரி, வவுனியா, கண்டி, கடவத்தை, அக்கரைபற்று, யாழ்ப்பாணம், நுவரெலியா, பதுளை மற்றும் மினுவங்கொடை ஆகிய இடங்களில் இவை நடத்தப்பட்டன. 'வர்த்தக மூலோபாயங்களை புதுப்பித்தல்' 'இலாபத்தன்மை மற்றும் உற்பத்தித் திறன்' 'டிஜிட்டல் பரிமாற்றம் மற்றும் டிஜிட்டல் சந்தை இடம்' 'டிஜிட்டல் வர்த்தக முத்திரை முகாமைத்துவம்' மற்றும் 'மகளிர் வலுவூட்டல் மற்றும் தொழில்முயற்சி;' ஆகிய தலைப்புக்களில் இந்த செயலமர்வுகள் இடம்பெற்றன.

IFC இன் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பயிற்றுவிப்பாளர்களால் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. IFC ஆல் நடத்தப்பட்ட பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்ற கொமர்ஷல் வங்கியின் அதிகாரிகளால் இந்தத் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று வங்கி அறிவித்துள்ளது.

MSMEs க்களுக்கான ஆற்றலையும் அறிவையும் மேம்படுத்தும் வகையில், இந்த விஷேட தொடரை ஆரம்பிக்க முன்னர் கொமர்ஷல் வங்கி சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடன் (IFC) இணைந்து பயிற்சித் தேவைகளை மதிப்பீடு செய்யும் வகையில் பாட வடிவங்களையும், முன் கூட்டிய கேள்விக் கொத்து படிவங்களையும் தயாரித்தது, முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தியது. எதிர்காலத்தில் SME க்களுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வங்கி அதிகாரிகளை வளவாளர்களாகப் பயிற்றுவிக்கும் வகையில் இந்நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

**" நாட்டில் தொழில்முயற்சிப் பிரிவின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் வகையில் நிதி ரீதியான விழிப்புணர்வு மற்றும் நிதி கற்கை திட்டங்களை மேற்கொள்வதில் முன்னோடி நிறுவனமாக கொமர்ஷல் வங்கி காணப்படுகின்றது. அரச மற்றும் தனியார் பிரிவினரின் ஒத்துழைப்போடு இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன**

"SME க்கள் விடயத்தில் கொமர்ஷல் வங்கி எப்போதுமே விஷேட கவனம் செலுத்தி வந்துள்ளது. இலங்கையில் இந்தப் பிரிவினருக்கு ஆகக் கூடுதலான கடன்களை வழங்கும் நிறுவனமாகவும் கொமர்ஷல் வங்கியே உள்ளது' என்று வங்கியின் தனிநபர் வங்கி மற்றும் SME பிரிவின் உதவி பொது முகாமையாளர் எஸ். கணேஷன் கூறினார்.

"SME ஆற்றல் திட்டத்தின் குறிக்கோள் எம்முடன் ஏற்கெனவே இருக்கின்ற மற்றும் ஏனைய சாத்தியமுள்ள MSME வாடிக்கையாளர்களின் வர்த்தக முகாமைத்துவ ஆற்றலை மேம்படுத்துவதும், கொவிட்-19 நோய் பரவலின் நீண்டகால எதிர்மறை தாக்கங்களை தணிப்பதும் தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதும் ஆகும். எமது இறுதி இலக்கு MSME க்களின் வர்த்தக செயற்பாடுகளில் நிலைத்தன்மையை ஸ்தாபிப்தாகும்.' என்றும் அவர் மேலும் கூறினார்.

நாட்டில் தொழில் முயற்சிப் பிரிவின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் வகையில் நிதி ரீதியான விழிப்புணர்வு மற்றும் நிதி கற்கை திட்டங்களை மேற்கொள்வதில் முன்னோடி நிறுவனமாக கொமர்ஷல் வங்கி காணப்படுகின்றது. அரச மற்றும் தனியார் பிரிவினரின் ஒத்துழைப்போடு இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த சுமார் ஒரு தசாப்த காலத்தில் கொமர்ஷல் வங்கி இவ்வாறான 170க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. இவற்றால் பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 15,000 தொழில் முயற்சியாளர்கள் பயன் அடைந்துள்ளனர்.



# கவிதைக்கு பொய் அழகு

தேயும் நிலவு கேட்டது
காயும் நதியே
பெண்மைக்கு உவமை எதுவென...

சலசலத்தோடும் ஆறு
பளீரென ஒளிரும் தண்மதி
இவையே பெண் என்றது நதி...

வெடித்து கிடந்த நிலம் சிரித்தது
பசுமையாய் பொறுமையாய்
இருந்தால் தான் மதிப்பு...

பொலிவிழந்து வறண்டு
குறையாய் வெறுமையாய்
கிடந்தால் போற்றுவாரில்லை என்றது...

குழம்பிய நிலா கேட்டது
நதியில் என்ன
வேற்றுமை
நிலவில் என்ன
பேதம்
பூமியில் என்ன
வித்தியாசம்
உண்மை
எது என
நதி சொன்னது
கவிதைக்கு
பொய் அழகு...



– அருவி



# இயற்கை அன்னையின் அவலம்

சுத்தக் காற்றும் சுகமானவாழ்வும்
பக்கவிளைவின்றிய
இயற்கையின் கொடைகளாய்
ஆழ வேரோடி அழகாய் கிளையாடி
ஞாலம் காக்கும் நற்பயனும் நல்கி
வாழும் காலம் யாவும்
வசந்தத் தென்றல் வீசி
வருந்தும் போது மருந்து மளித்து
விருந்தாய் மாறி வறுமையொழித்து
தருவெனும் பெயரால்
அரும் பயன் அளித்தவற்றை
நெறிமறந்து நீயும் அழிக்க
வாளேந்தினால்
இயற்கையின் சீற்றமும்
சீண்டித் தான் பார்க்கும் உனை

ஏர் பிடித்துப் பதமிதமாய்
உழுது
இருபோகம் முப்போகம்
விளைந்தமண்ணை
மலடாக்கி இரசித்திடலும்
நியாயந்தானோ?
பல்லுயிர் வாழ்வின்றுபட்டினியில்
பரிதவிக்கக் காரணமும்
உன்னில் குடிபுகுந்த
நவீனந் தானோ?


ஓசோனினில் ஓட்டையடித்தாய்
வளர்ந்த நவீனத்தால்
தேசம் முழுதுமின்று
தவிக்குது வெப்பத்தால்
நெகிழிக் குப்பைகளும்
எரிக்கும் இரசாயணங்களும்
சுற்றுச் சூழலைக்
கட்டியணைக்க
மண்வளம் மரித்து உன் பலம்
சிதைத்திடவும்
கண்களில் நீருடன்
கடந்துதான் செல்கின்றாய்
இயற்கையின் வசம் சற்று
இயைந்துதான் பாரடா .....

வேஷரூன்ற மறுக்கும் விதைகளின்
பிடிவாதத்தால்
பாரோர் வயிறுகளில் பாரிய
சுருக்கங்கள்
கரும்புகை கக்கி சுவாசப்பை கருக்கியும்
கதிர் வீச்சுக் கொண்டுகருப்பை
சிதைத்தும்
மனித வளம் அழித்தும் உணராத மானிடனே
இயற்கையை அணையடா
இன்பங்கள் காண்பாய்

இயற்கை எழிலைக் கவியெழுதி
இரசித்திடக்
கவிஞனின் பேனாக்களுக்குப்
பலனில்லையின்று
செயற்கைப் புகழை
செந்தமிழால்
மெருகூட்டிக் கவி
புனைந்து
இரசித்திடவும்
மனமியம்பவில்லை...



– குகதா



# மாறாத வாழ்வு மாறுமா?

அவர்களிடம் மேய்ச்சல்
நிலமில்லை
மேய்ப்பதற்கும் - நல்ல
தலைவன் இல்லை
கன்றுக்கும் வால் இல்லை
அதைப்பற்றி
கதைப்பதற்கும் - இனி
யாரும் இல்லை
உறைக்க பாலும் இல்லை
அவர்களிடம்
உறிகட்ட நூலும் இல்லை
மோரைக் கடைந்தால்
முழு வெண்ணெய்
கிடைக்கும் என்ற
மோகம் இன்று
அவர்களுக்குள்
அங்காங்கே துளிர்க்கிறது.

ஆடை நீக்கியபால்
அனைவருக்கும்
மிக நல்லமென்று
அதில் கொள்ளை
அடுத்தவரால் நடக்கிறது.
எங்கிருந்தோ
எருமைக்கு
நிறம் சேர்த்து
பசுநெய் எங்கும்
மிகபரவலாக
புழக்கத்திலே கிடைக்கிறது.

ஆனால் பரிதாபம்
தயிர் உறைக்க
தயிர் போடும்
தத்துவம் தான்
தமிழர் வாழ்வில்
தப்பாக தற்போதும்
தொடர்கிறது.



– இரவிகாந்தன்
திருகோணமலை

# பேரின்பம்



இரு பக்கங்களை
தவிர்க்க விரும்பினோம்.
நான் சந்தோசமென்ற
கல்லை எறிகிறேன்
அவள் கவலை
என்ற பறவையினை
பறக்க விடுகிறாள்...
ஓர் இரவு விடுதியில்
இத்தனையும் நடந்தன
அவரவர் நினைவுகள்
அவரவர் பாதையில்...
விடிந்தது நான்
சந்தோசமற்ற சந்தோசத்திலும்
அவள் கவலையற்ற
கவலையிலுமிருந்தோம்.
மீண்டும் இரவுக்கென
காத்திருக்கிறோம்...
இக்கால இருமையிலிருந்து
வேறொன்றுக்காய்
வேறொன்றுமில்லை...

–லலித்தா



# பெண்கள் உரிமைகளும் பாதுகாப்பும்

தொகுப்பாக்கம்
எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதிய்யா
அதிபர்
கமு/கமு அஸ்–ஸுஹறா வித்தியாலயம்.
B.Ed(Hons.), M.Ed, PGDEM (Merit),
LLB final year,Diploma in journalism(reading)–seusl

'மனிதன் பிறக்கும்போதே அவனுடன் சேர்ந்து உரிமைகளும் பிறக்கின்றன' என்று சொன்னால் மிகையாகாது. இது விட்டுக்கொடுக்க முடியாத அவர்களுக்கிடையில் பெறவேண்டிய மற்றும் உரித்தானவையாகும்.

இவ்வுரிமைகளும் சுதந்திரங்களுமின்றி மனிதனால் வாழ முடியாது எனக் கருதப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் அனைவருக்கும் சமமாகவும் பிரிக்க முடியாததுமான இம்மனித உரிமைகள், வழக்காற்றுச் சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் வழியாக உறுதிப்படுத்தப்படுகின்றன.

இவ்வகையில் பெண்களின் உரிமையினை எடுத்து நோக்குவோமேயானால் மனிதனின் ஆதிகால சமுதாயமானது பெண்களின் தலைமைத்துவத்தையே கொண்டிருந்து. இது மட்டுமல்லாது பெண்கள் தெய்வங்களாகவும் போற்றப்பட்டனர்.

ஆனால், மனித நாகரிகம் வளர்ச்சியடைய வளர்ச்சியடையப் பண்கள் படிப்படியாக ஒதுக்கப்பட்டு வந்தனர். இதனால்தான் பெண்ணியவாதிகளின் சிந்தனைகளினாலேயே பெண்களின் உரிமைகள் மீட்டெடுக்கப்படல் வேண்டும் என்ற எண்ணக்கரு மேலோங்கியது எனலாம்.

இந்நிலையில், பெண்களுக்கெதிரான சில வன்முறைகள் தோன்றின. கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் தொந்தரவு, பெண்களை, இழிவான வியாபாரத்தில் பயன்படுத்தல், பலாத்காரப்படுத்தப்பட்ட விபசாரம், தடுப்புக்காவல் மற்றும் யுத்த காலங்களில் கற்பழிப்பு, இனப்பெருக்க உறுப்புகளைச் சிதைத்தல், சிறு வயது திருமணம், குடும்ப வன்முறைகள், சீதனம் போன்ற இன்னோரென்ன பல விடயங்களில் பெண்கள் பல்வேறு இம்சைகளுக்குள்ளாகின்றனர்.

UDHR ஆனது பெண்களின் உரிமைகள் தொடர்பாக அத்திவாரமிடக் காரணமாயிற்று. UDHR உறுப்புரை 01இல் 'மனித பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும், உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும் மனசாட்சியையும் இயற்கையாகப் பெற்றவர்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் சகோதர உணர்வுப்பாங்கில் நடந்து கொள்ள வேண்டும்' என்கிறது.

UDHR உறுப்புரை 02இல் 'இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைய தேசிய அல்லது சமூகத்தோற்றம் ஆதனம், பிறப்பு அல்லத பிற அந்தஸ்து போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி இப்பிரகடனத்தில் தரப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கும் சுதந்நிரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவராவர்.'

UDHR பிரிவு 03இன்படி 'வாழ்வதற்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் சகலரும் உரித்துடையோராவர்.'

UDHR பிரிவு 07 இன்படி 'எல்லோரும் சட்டத்தின் முன் சமமானவர்கள். பாரபட்சம் எதுவுமுமின்றி சட்டத்தின் முன் சமமானவர்கள். பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கும் உரித்துடையவர்களாவர்.' இவைகள் பெண்களின் உரிமைகள் தொடர்பான ஆரம்ப ஆவணங்களாக காணப்படுகின்றன.

ICCPR உறுப்புரை 06இன்படி 'ஆணுக்கும் பெண்ணுக்குமாக சமநிலையான உரிமையினை அரசு நிச்சயப்படுத்த வேண்டும்' என்கிறது.

ICCPR உறுப்புரை 23 இன்படி 'குடும்பமானது, சமூகத்தினாலும், அரசினாலும் பாதுகாக்கப்பட உரித்துடையது' என ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை, 'திருமணத்திலும், திருமண காலத்திலும் மற்றும் அதன் அமைப்பிலும் வாழ்க்கைத்துணைவர்களின் சமமான உரிமைகளை உறுதிப்படுத்த அரசு கடமைப்படுகின்றது' என்கிறது. இங்கு திருமண வயதில் ஆள்சார் சட்டங்களில் வயது வித்தியாசம் காணப்படுகின்றது.

ICESCR உறுப்புரை 03இல் 'பொருளாதார சமூகப் பண்பாட்டு உரிமைகளையும் ஆராய்வதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமையினை உறுதிப்படுத்துகின்றது.'

ICESCR உறுப்புரை (7) (அ) (1) இற்கமைய 'ஆண்களின் ஆளப்படுகின்ற வேலை நிபந்தனைகளிலும் பார்க்கக் குறைந்தளவான வேலை நிபந்தனைகளுக்குப் பெண்கள் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்'. ICESCR உறுப்புரை (13) (2) (10) (1) 'கல்வி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்' என்பதைக் குறிப்பிடுகின்றது.

அந்த அடிப்படையில் 1980களில் தான் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் அழித்தொழிக்கப்படல் வேண்டும் என்ற கரிசனையும் ஏற்பட்டது. இது தொடர்பான பிணக்கும் இரண்டு அம்சங்களின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டது.

1.பெண்களுக்கெதிரான ஓரம்கட்டுதல்கள் நிறுத்தப்படுதல் வேண்டும்.

2.பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிறுத்தப்படுதல் வேண்டும்.

இந்த அடிப்படையில், CEDAW 1981ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இச்சமவாயமானது எவை பெண்களுக்கெதிரான பாரபட்சங்களாக கொள்ளப்படவேண்டும். அத்தகைய பாரபட்சங்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவை என்று இரு விடயங்களையும் விரிவாக விளங்குவதன் மூலம் அதனை அனேகமாகப் பெண்கள் உரிமைகளுக்கான சர்வதேச சட்ட மூலம் என சிறப்பாக விபரிக்கின்றது. இச்சமவாயமானது ஆறு பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.

பகுதி- i இல், உறுப்புரை 01 முதல் 06 வரை பெண்களுக்கெதிரான பாரபட்சத்தின் வரைவிலக்கணத்தை உள்ளடக்கியுள்ளது.

பகுதி- ii இல், உறுப்புரை 07 முதல் 09 வரை அரசியல் மற்றும் பொது வாழ்வில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான அரசுகளின் கடப்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

பகுதி-iii இல் உறுப்புரை 10 முதல் 14 வரை கல்வி, தொழில் வாய்ப்பு, உடல் நலம், பொருளாதார, சமூக, கலாசார வாழ்வு போன்ற துறைகளில் பெண்களுக்கு எதிரான பாரபட்சங்கள் அகற்றுவது தொடர்பான முன்னேற்பாடுகளைக் கொண்டுள்ளது. மேலும் இப்பகுதி கிராமிய பெண்களின் விசேட பிரச்சினைகள் தொடர்பாக அரசுகளின் கடப்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.

பகுதி- iv ன் 15, 16ஆம் உறுப்புரைகள் பெண்களின் உரிமைகள் மற்றும் விவாகம், குடும்பவியல் சட்டம் என்பவற்றைச் செயற்படுத்துகையில் சட்டத்திற்கு முன் "ஆண்களுடன் பெண்கள் சமம்" என்ற நிலையை அடைந்துகொள்வது தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

வியட்னாமில் 1993இல் நடைபெற்ற மனித உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் உலகமாநாடு பெண்களால் தமது உரிமைகளுக்காக நடத்திய போராட்டம் ஒரு தேசிய மைக்கல் எனலாம். இம்மாநாட்டிற்கு முன்னரும் அது நடந்த வேளையிலும் பெண்கள் முன்னொரு பொழுதும் கண்டிராத விதத்தில் தமது சக்திகளை ஒருங்கிணைத்ததனால் சர்வதேச சமூகம் பின்வருமாறு கூறியுள்ளது.

UN பொதுச்சபைகளினால் 1999இல் Optinal Protocol to the CEDAW அங்கீகரிக்கப்பட்டு 2000இல் அமுலாகி வந்தது. இலங்கை 2002இல் பின்னுறுதிப்படுத்தியது. இதன் கீழான ஏற்பாடுகள் இலங்கை பிரஜைகளுக்கும் ஏற்புடையதாகும்.

## பெண்கள் தொடர்பான தொழிற்சட்டங்கள் அரசியலமைப்பில்:

உறுப்புரை (1) (2) பால் ரீதியான பாரபட்சம் காட்டப்பட இயலாது என்பதனூடாக பெண்கள் ஆண்களுக்குச் சமமாகத் தொழில் செய்வதை உறுதிப்படுத்துகின்றது.

1933ஆம் ஆண்டின் Sex Disqualification Removal (Legal profession) Ordinance ஊடாக பெண்கள் எந்த தொழிலிலும் இணைவதற்குச் சட்ட ரீதியான உரிமைகள் கொண்டுள்ளனர். எனினும் அரசியலமைப்பினூடாக பால் ரீதியாக பாதிக்கப்பட்ட பெண் தொழிலாளி ஒருவருக்கு உயர் நீதிமன்றில் நிவாரனம் பெறுவதில் சில மட்டுப்பாடுகள் காணப்படுகின்றது. குறிப்பாக அரச உத்தியோகத்தர்களால் அடிப்படை உரிமை மீறப்பட்டிருக்குமாயின், அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கமைய உயர் நீதிமன்றில் நிவாரணம் பெறமுடியும். எனினும் தனியாருக்கு எதிராக இவ்வேற்பாட்டின்படி, நிவாரணம் பெற முடியாது. மேலும், உறுப்புரை 16(1)இன் பிரகாரம் பழைய சட்டங்களை உயர்நீதி மன்றினால் கேள்விக்குட்படுத்த முடியாது.

மேலும், உறுப்புரை 12(4) பிரகாரம் பெண்களின் நலனுக்காக உருவாக்கும் சட்டங்களைக் கேள்விக்குட்படுத்த முடியாது. உறுப்புரை 12(3) இன் பிரகாரம் சட்டம் ஒன்று உருவாக்கப்படும்போது, அதில் பாரபட்சம் காணப்படுமானால் பாராளுமன்றினூடாக அதனைக் கேள்விக்குட்படுத்தலாம். அரச துறையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தொழிலில் எந்தவித பாரபட்சமும் காணப்படுமானால் பாராளுமன்றினூடாக அதனை கேள்விக்குட்படுத்தலாம்.

அரசதுறையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தொழிலில் எந்தவித பாரபட்சமும் காணப்படவில்லை. எனினும் தனியார் துறையில் பெண்களுக்கு சில மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. அரசியல் அமைப்பு இதற்கு எந்த நிவாரணத்தையும் இதுவரை வழங்கவில்லை.

## ஏனைய சட்டக்கட்டுப்பாடுகள்:

பெண் தொழிலாளர்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் 3 வகைகளாகக் காணப்படுகின்றன.

i.பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள்

ii. தொழில் நிபந்தனைகள் மற்றும் சமூகப் பாதுகாப்புக்கான சட்ட ஏற்பாடுகள்

iii. தொழிலாளர் சுகாதாரம் தொடர்பான சட்ட ஏற்பாடுகள்.

பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் 1923இல் EWYC Ordinance இது பெண்களைக் குறிப்பிட்ட சில தொழில்களில் ஈடுபடுத்துவதற்கான மட்டுப்பாடுகளை விதிக்கின்றது. EX - சுரங்கத் தொழில், இரவு நேரக்கடமை

1937இன் Employment of Female in Mines Ordinance இது பொதுவாகப் பெண்களை நிலத்திற்குக் கீழே வேலை செய்வதைத் தடுக்கிறது. Factories Ordinance 1942 தொழிற்சாலைகளில் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படுபவைளை கட்டுப்படுத்துகின்றது. Sec 14.2(b)(III)

1979இன் CEDAW வில் இலங்கை 1981இல் அங்கத்தவராக இணைந்தது. இதனூடாக பெண்களுக்கும் சமமான தொழில் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் 1984 ILO Convention இல் கூறப்பட்ட பெண்கள் இரவு நேரக்கடையில் ஈடுபடுவதனைத் தடுக்கும் ஏற்பாட்டினை இல்லாமல் செய்யப்பட்டது. இது 1984இன் 32ஆம் இலக்க தடைச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டதாகும். எல்லாப் பெண்களும் இரவு 6.00 மணிமுதல் 8.00 மணி வரையிலும் கடையிலும் அலுவலகங்களிலும் வேலை செய்ய முடியும். 1984இன் 32ஆம் இலக்க Night Work act இன் பிரகாரம் எந்தவொரு தொழில் வழங்குநரும் பெண் தொழிலாளர்களை இரவு நேரக் கடமையில் ஈடுபடக் கட்டாயப்படுத்த முடியாது.

## தொழில் நிபந்தனைகள் மற்றும் சமூக பாதுகாப்புக்கான சட்ட ஏற்பாடுகளும்:

1941இன் Wages Board Ordinance உருவாக்கப்பட்டு சம்பள அளவுத்திட்டங்களில் Skills Labour, Un Skills Labour, Factory Workers போன்ற தொழில்களின் அடிப்படையில் சம்பள க் கட்டமைப்பினை உருவாக்கியது. எனினும் 1984இலேயே ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான சம்பளம் பெருந்தோட்டத்துறையில் ஏற்படுத்தப்பட்டது.

EPF Act 1958இன் பிகாரம் ஆண்களைவிடப் பெண்கள் முன்னரே தங்களுடைய EPF Claim இனைப் பெற்றுக் கொள்ள முடியும். எவ்வாறு இருப்பினும் வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிபுரியச் செல்லும் பெண்கள் தொடர்பாகச் சட்டம் போதுமானளவு ஏற்படுத்தப்படவில்லை.

முதன் முதலாக 1865இல் Service Contract Ordinance மூலமாக ஒரு மாத முன்னறிவித்தல் அல்லது ஒரு மாத சம்பளத்தைச் செலுத்துதல் எனும் பாதுகாப்பு ஏற்பாடு இருக்கிறது. எனினும் சேவை நிபந்தனைகள், விடுமுறை, சமூகப் பாதுகாப்பு, ஓய்வூதியச் சலுகைகள் போன்ற எதுவும் வீட்டுப்பணிப்பெண்களுக்கு சட்டரீதியாக இல்லாமை பாரிய குறைபாடாகக் காணப்படுகின்றது.

தொழிலாளர் சுகாதாரம் தொடர்பான சட்ட ஏற்பாடுகள்.

1942இன் Factories Ordinance ஆனது காலனித்துவ ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பெண் தொழிலாளர்கள் தொடர்பான வேலை நேரம் தொடர்பான பிரதான சட்டமாகும் மற்றும் இச்சட்டமானது தொழில் வழங்குநர், தொழிற்சாலைகளில் சுகாதாரம் தொடர்பான தராதரங்களைப் பேணுவதையும் வலியுறுத்துகின்றது.

முதன் முதலாக முகாமைத்துவ தரத்திலுள்ளவர்களுக்கும் White Collar Job செய்பவர்களுக்கும் அவர்களது நலனோம்பு தொடர்பான சட்டங்கள் உருவாக்கப்பட்டது The Shop Act -1954 வினாலாகும்.

1976இல் Factory Ordinanceற்கு கொண்டுவரப்பட்ட திருத்தமானது இலகுவில் பாதிப்படையக்கூடிய மனித உடல் அங்கங்களான கண், காது, மற்றும் ஒலி, மாசடைதல், கதிர்வீச்சு, அதிர்வு, வாயு போன்றவற்றிலிருந்தும் பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. (Sec 51 (A), 53, 53(A), 58(A)

Sec 99இன் பிரகாரம் சட்டத்தின் திருத்தமானது கைத்தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான ஆலோசனை வழங்கும் சபைகளை உருவாக்குதல் தொடர்பான சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

சாதாரணமாக ஒரு தொழிலாளி தனக்கு ஏற்பட்ட காயத்துக்கு தீங்கியல் சட்டத்துக்கூடாகச் சாதாரண நடைமுறையில் நட்டத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கு மேலதிகமாக நீதிமன்றம் ஊடாகச் செல்லாமல் Workman's Compensation என்ற கொள்கை உருவாக்கப்பட்டு நிவாரணம் பெறுவதற்கு வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கொள்கையானது Workman's Compensation Ordinance 1934 என்ற சட்டத்திலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் பெறப்படும் நிவாரணம் மிக செற்பமாகக் காணப்படுகின்றது. நிரந்தர ஊனம் அல்லது இறப்பிற்கும் கூட மிகக் குறைந்தளவே நிவாரணம் வழங்கப்பட்டது.

## வேலையிடத்தில் ஏற்படும் வன்முறைகள்:

அரச நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் தொழிலாளர்களுக்கு எதிரான செயல்களுக்காக அடிப்படையுரிமை மீறல் மூலம் நிவாரணம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை, தனியார் நிறுவனங்களில் ஏற்படும் இவ்வாறான நடத்தைகளுக்கு எவ்வாறு நிவாரணம் வழங்கலாம் என்ற வினா எழுப்பப்படுகின்றது.

சட்டக் கட்டுப்பாடும் சட்டத்தை அமுல்படுத்தலும் பெண்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்திற்கு வரும்போது நியாயமானதும் சமத்துவமானதுமான நியாயாதிக்கத்தைப் பெண்களுக்கு நியாயம் வழங்குவதற்கு நீதிமன்றங்கள் கையாண்டுள்ளன. சர்வதேச மகளிர் தினம் சுருக்கமாக IWUD என்றும் அழைக்கப்படுகின்றது. இது தொழிலாளர் இயக்கத்திலிருந்து வளர்ந்து ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நிகழ்வாக மாறியது. மகளிர் தினம் 1911ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகின்றது. எனவே, இவ்வாண்டு 2024 மார்ச் 08, இன்று கொண்டாடப்படும் மகளிர் தினத்தில் ஊதா நிறம் நீதி மற்றும் கண்ணியத்தையும் , பச்சை நிறம் நம்பிக்கையையும் , வெள்ளை தூய்மையையும் பிரதிபலிக்கிறது.

சமூக சீர்திருத்தம், மகளீர் மேம்பாடு, நல்லிணக்கம், மொழித்தொண்டாற்றல், கலை, அறிவியல், மேம்பாடு, கலாசாரம், பத்திரிகை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருது' (08.03.2024) இன்று இந்தியாவில் தமிழக முதலமைச்சரால் வழங்கி கௌரவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. எனவே, எமது பெண்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள், கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றைப் பயன்படுத்தி எமது நாட்டின் அபிவிருத்தி பாதைக்கு கை கொடுக்க வேண்டும்.

அத்துடன், இன வேறுபாடின்றி சுதந்திரமாகப் பாரபட்சம் காட்டாது சமத்துவத்துடன் சமமான உரிமைகள், நேர முகாமை, கல்வி மற்றும் வியாபாரம் என அரசியல், பொருளாதார, சமூக, கலாசார,பண்பாடு ரீதியாக அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் சகல மக்களுடனும் இணக்கப்பாட்டுடன் வாழ்வதற்கும் இம் மகளிர் தினத்தில் எமக்களித்த உரிமைகளையும் பாதுகாப்பையும் உயிரூட்டி சக்தி நிறைந்த பலமாக மகளிர் ஒன்றுபட்டு வாழ்வோம்.







மஹா சிவராத்திரி நடன கலா

# 'கைலேஸ்வர நாட்டியாஞ்சலி 2024'

மஹாசிவராத்திரியை முன்னிட்டு, கலா ரசிகா பக்தியுடன் வழங்கும் "கைலேஸ்வர நாட்டியாஞ்சலி 2024" இலங்கை மற்றும் சர்வதேச நடன கலைஞர்களின் மகா சங்கமாக 12 மணி நேர இடைவிடாத கோலாகல சர்வதேச நாட்டிய திருவிழாவாகும்.

நிகழ்வானது எதிர்வரும் பங்குனி மாதம் 8ஆம் நாள் (இன்று) மஹாசிவராத்திரி தினத்தன்று சிற்பக்கலை கோயிலாய் விளங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க வெள்ளவத்தை மயுரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவில் வளாகத்தில் மாலை 6 மணி தொடக்கம் காலை 6 மணி வரை வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

இலங்கையின் பாரம்பரிய நடனக் கலையின் மூத்த கலைஞர்கள் முதல் இளம் முன்னிலை கலைஞர்கள் மற்றும் இளம் கலைஞர்கள் என அனைத்து கலைஞர்களின் நாட்டிய சமர்ப்பணத்தை வழங்குவதோடு, அல்லாது இந்நிகழ்விற்கு மகுடம் சூடும் வகையில் இந்திய மற்றும் உலக நடனக் கலைகளின் தலைசிறந்த நடனக் கலைஞர்களும் ஒன்றுகூடும் இந்த உன்னத பேரானந்த இரவு ஒரு மறக்க இயலாத அனுபவத்தை உங்களுக்கு வழங்கவிருப்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இம்முறை கைலேஸ்வர நாட்டியாஞ்சலி 2024 இந்தியப் பாரம்பரிய கலைகளின் ஏழு மாநிலங்களைக் குறிக்கக்கூடிய 7 மாநிலங்களுக்கு உரித்தான நாட்டிய வகைகளான பரதநாட்டியம், மோகினியாட்டம், கதக்களி, குச்சிப்புடி, கதக் மற்றும் மணிப்புரி என ஏழு வகையான கலாசார நடனங்கள் இடம்பெற இருப்பது கூடுதல் அழகு.

கலா ரசிகாவின் பணி என்பது இந்திய மற்றும் இலங்கை கலாசாரம் பாரம்பரியத்தின் செழுமையை வெளிப்படுத்துவதும் பல்வேறு இந்திய நடன வடிவங்களைக் குறிப்பாக இந்தியாவுக்கான பாரம்பரிய நடன பாணிகளை உள்ளடக்கிய நிகழ்ச்சிகள் மூலம் பாரம்பரியத்தை வரலாற்று புகழ்பெற்ற கோயில்கள் மற்றும் இடங்களில் பரப்புவது மட்டுமல்லாது இலங்கைக்குத் தரமான மற்றும் பார்வைக்குப் பிரமிக்க வைக்கும் தயாரிப்புகளை உருவாக்க



அயராது உழைப்பதோடு மட்டுமல்லாது உலகளாவிய கலைஞர்களின் மிக உயர்ந்த கலைப் படைப்புகளை இலங்கை கலை ஆர்வலர்களுக்குக் கொண்டு செல்வதே எம் நோக்கமாகும்.

ஒன்பதாம் ஆண்டில் தடம் பதிக்கும் கைலேஷ்வர நாட்டியாஞ்சலியானது இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான கலை கலாசார பாரம்பரிய விளம்பியங்களை பரிமாற்றுவதோடு, மட்டுமல்லாது சர்வதேச கலைஞர்களின் நாகரிகங்களின் பரிமாற்றுதலையும் சிறப்பாகச் செய்து வருகிறது.

ஒவ்வொரு முறையும் இந்நிகழ்விற்காகப் பல நாடுகளில் இருந்தும் பல திறமை மிக்க கலைஞர்கள் வந்து பங்கு பெறுவதில் பெருமிதம் கொள்கிறது கலா ரசிகா!

இந்த நிகழ்விற்கான அனுமதி அனைவருக்கும் இலவசம் என்று அன்போடு தெரிவித்துக் கொள்வதோடு நீங்கள் பாரம்பரிய நடனத்தின் அனுபவமிக்க ஆர்வலராக இருந்தாலும் அல்லது முதன்முறையாகக் கலந்துகொள்பவராக இருந்தாலும், 'கலா ரசிகா' குழுவினரின் 9ஆவது ஆண்டு மகா சிவராத்திரி கலாச்சார நிகழ்வான "கைலேஸ்வரம் நாட்டியாஞ்சலி 2024" வெள்ளவத்தை - மயுரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலில் நடைபெறும்.

இந்த கலாசாரம் மற்றும் பக்தி கொண்டாட்டத்தில் இனைய அனைவரையும் வரவேற்கிறோம். ஆன்மீகமும் கலைத்திறனும் இணையும் இந்த மறக்க முடியாத இரவின் ஒரு பகுதியாக இருக்க அன்போடு அனைவரையும் அழைக்கிறோம்.



# பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுமியின் உடல் தகனம்

புதுச்சேரியில், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்த சிறுமியின் உடல், வியாழக்கிழமை (07) தகனம் செய்யப்பட்டது.

புதுச்சேரியை சேர்ந்த 9 வயது சிறுமி கடந்த சனிக்கிழமை காணாமல்போன நிலையில், 72 மணித்தியாலங்களின் பிறகு கடந்த செவ்வாய்க்கிழமை(5), அம்பேத்கர் நகர் வாய்க்காலில் துணியால் சுற்றப்பட்டு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

சிறுமி உயிரிழப்பு தொடர்பாக 19 வயதுடைய கருணாஸ் என்ற இளைஞரையும், 57 வயதான விவேகானந்தன் என்பவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். முதற்கட்ட விசாரணையில், சிறுமியின் உடலை வேஷ்டியில்



மூட்டையாக கட்டி வாய்க்காலுக்குள் அவர்கள் போட்டுவிட்டுச் சென்றது தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டுமென பொதுமக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே, சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்டது தெரியவந்ததையடுத்து, போக்சோ உள்ளிட்ட 6 பிரிவுகளின் கீழ் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

பிரேத பரிசோதனை நிறைவடைந்த நிலையில் உயிரிழந்த சிறுமியின் உடல் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு, நேற்றைய தினம், இறுதிச் சடங்குகளுக்குப் பிறகு தகன கிரியைகளுக்காக, ஊர்வலமாக மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த இறுதி ஊர்வலத்தில் பெரும் திரளான மக்கள் பங்கேற்றனர். புதுச்சேரி மக்கள் அனைவருமே ஒரே இடத்தில் கூடியது போன்ற அக்காட்சி, பார்ப்போரையும் நெகிழச்செய்தது.

## கைகளை இழந்தவருக்கு மாற்று கைகள்

டெல்லியில், விபத்தில் இரண்டு கைகளையும் இழந்த நபர் ஒருவருக்கு, தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் குழுவொன்று, மாற்று கைகள் பொருத்தி சாதனை படைத்துள்ளது.

வர்ணம் தீட்டும் தொழில் செய்பவரான குறித்த நபர், கடந்த 2020ஆம் ஆண்டு, நடந்த இரயில் விபத்தொன்றில், தனது இரு கைகளையும் இழந்துள்ளார். அதன் பிறகு அவரது வாழ்க்கை வெறுமையாகி உள்ளது.

இந்நிலையில், டெல்லியில் இருக்கும் பாடசாலை ஒன்றின் முன்னாள் நிர்வாக தலைவரான மீனா மேத்தா என்பவர், விபத்தொன்றில் மூளை சாவு அடைந்துள்ளார். இவர் தனது இறப்பிற்கு பிறகு உடல் உறுப்புகளை தானம் கொடுக்க ஏற்கனவே சம்மதித்திருந்ததால், உறவினர்களின் அனுமதியுடன் இவரது சிறுநீரகம், கல்லீரல் மற்றும் கருவிழிகள் ஆகியவை வெவ்வேறு நோயாளிகளுக்கு பொருத்தப்பட்டு அவர்களின் வாழ்க்கை மாற்றியமைக்கப்பட்டது.

அதேபோல் மீனா மேத்தாவின் இரு கைகள் அகற்றப்பட்டு, விபத்தில் கைகளை இழந்த குறித்த நபருக்கு பொருத்தி, மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.



## விவாகரத்துக்கு காரணமான லிப்ஸ்டிக்

தான் கூறியதை விட அதிக விலை கொடுத்து லிப்ஸ்டிக் வாங்கி வந்ததால், கணவரிடமிருந்து மனைவி விவாகரத்து கோரியுள்ள சம்பவமொன்று உத்திரப்பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உத்திரப்பிரதேச மாநிலம் ஆக்ராவைச் சேர்ந்த குறித்த பெண், தனது கணவரிடம் 10 ரூபாய் லிப்ஸ்டிக்கினை வாங்கி வருமாறு கூறியுள்ளார். ஆனால், அவருக்கு 10 ரூபாய் லிப்ஸ்டிக் கிடைக்கவில்லை. இதனால், 10 ரூபாய்க்கு பதிலாக 30 ரூபாய் லிப்ஸ்டிக்கினை வாங்கி வந்துள்ளார்.

இதனைக் கண்ட மனைவி, கணவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு, அவரிடமிருந்து விவாகரத்து கோரியுள்ளார்.

இவ்வழக்கை விசாரித்த ஆலோசகர் சதீஷ் கீர்வார், இது குறித்து விசாரணை நடத்தவே, 'என் கணவருக்கு சேமிக்கும் பழக்கம் இல்லை. குழந்தைகளுக்காக சேமிக்கும் நோக்கம் அவருக்கு இல்லை" என்று அப்பெண் கூறியுள்ளார்.

இதன்மூலம், உண்மையில் அவர்களின் பிரச்சினை லிப்ஸ்டிக் இல்லை, அதிகமாக செலவு செய்வதுதான் என்பது புரிய வந்தது.

இந்நிலையில், இருவரிடமுடம் நிலைமையை கூறிய ஆலோசகர், இருவரையும் சமாதானம் செய்து அனுப்பி வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.



## இஸ்ரேல் தாக்குதலில் இந்திய இளைஞர் பலி!

வடக்கு இஸ்ரேலின் மார்காலியோட் பகுதியில் ஒரு விவசாய நிலப் பகுதியில், கடந்த 4ஆம் திகதி நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் இந்திய இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். அவர், கேரள மாநிலம் கொல்லம் பகுதியைச் சேர்ந்த பாட்நிபின் மேக்ஸ்வெல் என விசாரணையில் தெரியவந்தது.

இஸ்ரேல் இராணுவம், எகிப்து எல்லையையொட்டி அமைந்துள்ள ராஃபாவிலும் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்திவருகிறது. பணயக் கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவிக்காவிட்டால், ரமழான் மாதம் தொடங்குவதற்குள் ராஃபா நகரில் தரைவழித் தாக்குதல் நடத்தப்படலாம் என தெரிகிறது.

பாட்நிபின் மேக்ஸ்வெல், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் ஒப்பந்தத்தின்பேரில் இஸ்ரேலுக்குச் சென்று பண்ணையில் வேலை செய்துகொண்டிருந்தார். அவருக்கு 5 வயதில் மகள் ஒருவர் இருக்கும் நிலையில், அவருடைய மனைவி தற்போது 7 மாத கர்ப்பிணியாகவும் உள்ளார். இந்தச் சூழலில் அவர் ஏவுகணை தாக்குதலுக்கு ஆளாகியிருப்பது அவருடைய குடும்பத்தை மிகவும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.



## 25 ஆயிரம் கோடியை இழந்த மார்க் ஸுக்கர் பெர்க்

மெட்டா நிறுவன அதிபர் மார்க் ஸூக்கர் பெர்க் (Mark Zuckerberg), 25 ஆயிரம் கோடி (3 பில்லியன்) இழந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள இணையதள பயனர்களுக்கு கருத்து மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கான சமூக வலைத்தளங்களில் ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் ஆகிய இரண்டும், முன்னணியில் உள்ளன. இந்நிலையில், இம்மாதம் 5ஆம் திகதி மாலை, உலகம் முழுவதும் இந்த இரண்டு சமூக வலைத்தளங்களும் சில மணி நேரம் முடங்கியதால் பயனாளிகள் பெருமளவு பாதிக்கப்பட்டனர்.

இதனால், அவற்றை பயன்படுத்துபவர்கள், கருத்து பரிமாற்றம், புகைப்படம் மற்றும் காணொலி பதிவேற்றம் உள்ளிட்ட அனைத்து சேவைகளையும் பெற முடியாமல் இருந்தது.

அதைத் தொடர்ந்து, இந்த இரண்டு தளங்களிலும் உள்ள உள்நுழைவு சிக்கல்கள் குறித்து பயனாளிகள் புகார் அளித்தனர். பின்னர், சில மணி நேரத்திற்குப் பிறகு அதன் தொழில்நுட்பக் கோளாறுகள் சரி செய்யப்பட்டு 2 தளங்களும் மீண்டும் செயல்பாட்டிற்கு வந்தன. நேற்றைய அமெரிக்க பங்குச் சந்தையில், மெட்டா பங்குகளின் சந்தை மதிப்பு 1.6 சதவீதம் குறைந்தது. இதனால் மெட்டா நிறுவன அதிபர் மார்க் ஜுக்கர்பர்க் 25 ஆயிரம் கோடி (3 பில்லியன்) இழந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.



## ஜனாதிபதி தேர்தலிலிருந்து நிக்கி ஹாலே விலகல்?



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கான போட்டியிலிருந்து விலகுவதாக இந்திய அமெரிக்கரான நிக்கி ஹாலே அறிவித்துள்ளார்.

குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடுவோருக்கான தேர்தலில் 15 மாகாணங்களில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இந்திய அமெரிக்கரான நிக்கி ஹாலே, குடியரசு கட்சி சார்பில் தான் போட்டியிடப்போவதில்லை என்றும், போட்டியிலிருந்து விலகுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், "மக்களின் குரல் கேட்கப்படவேண்டும் என நான் விரும்பினேன். அதை எப்போதும் செய்வேன். போட்டியிலிருந்து விலகினாலும் மக்களுக்காக எனது குரல் ஒலித்துக்கொண்டே இருக்கும்" என்று கூறியுள்ளார்.

### இரண்டாவது போட்டியில்

## இலங்கையை வென்ற பங்களாதேஷ்



இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், சியல்ஹெட்டில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

இலங்கை: 165/5 (20 ஓவ.)

(துடுப்பாட்டம்: கமிந்து மெண்டிஸ் 37 (27), குசல் மெண்டிஸ் 36 (22), அஞ்சலோ மத்தியூஸ் ஆ.இ 32 (21), சரித் அசலங்க 28 (14), தசுன் ஷானக ஆ.இ 20 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: சௌமியா சர்க்கார் 1/5 [1], ஷொரிஃபுல் இஸ்லாம் 0/20 [4], ரிஷாட் ஹொஸைன் 0/21 [3])

பங்களாதேஷ்: 170/2 (18.1 ஓவ. )

(துடுப்பாட்டம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ ஆ.இ 53 (38), லிட்டன் தாஸ் 36 (24), தௌஹிட் ஹிரிடோய் ஆ.இ 32 (25), சௌமியா சர்கார் 26 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: மதீஷ பத்திரண 2/28 [3.4], பினுர பெர்ணாண்டோ 0/22 [3])

போட்டியின் நாயகன்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் தீர்மானமிக்கதுமான போட்டியானது நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

## சம்பியன்ஸ் லீக்: காலிறுதியில் றியல் மட்ரிட்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் தகுதி பெற்றுள்ளது.

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான ஆர்.பி. லெய்ப்ஸிக்கின் மைதானத்தில் நடைபெற்ற இறுதி 16 அணிகளுக்கிடையிலான முதலாவது சுற்றுப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றிருந்த மட்ரிட், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தி, 2-1 என்ற மொத்த கோல் கணக்கில் காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை வின்ஷியஸ் ஜூனியர் பெற்றதோடு, லெய்ப்ஸிக் சார்பாகப் பெறப்பட்ட கோலை வில் ஓர்பன் பெற்றிருந்தார்.

இதேவேளை, டென்மார்க் கழகமான கோப்பென்ஹகன் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான முதலாவது சுற்றுப் போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் வென்ற நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி, தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியிலும் 3-1 என்ற கோல் கணக்கில் வென்று 6-2 என்ற மொத்த கோல் கணக்கில் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. சிற்றி சார்பாக, மனுவல் அகஞ்சி, ஜூலியன் அல்வரேஸ், எர்லிங்க் பிறோட் ஹலான்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். கொப்பென்ஹகன் சார்பாகப் பெறப்பட்ட கோலை மொஹமட் எலியுனுசி பெற்றிருந்தார்.

## பார்சிலோனா செல்லும் டிபாலா?

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான றோமாவின் முன்களவீரரான போலோ டிபாலாவைக் கைச்சாத்திட ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

றோமாவுக்காக நடப்புப் பருவகாலத்தில் 30 வயதான டிபாலா 13 கோல்களைப் பெற்றதோடு, ஏழு கோல்களைப் பெறுவதற்கு உதவி புரிந்துள்ளார்.

இத்தாலிக்கு வெளியேயுள்ள கழகங்கள் டிபாலாவைக் கைச்சாத்திட வேண்டுமென்றால், 12 மில்லியன் யூரோக்களைச் செலுத்த வேண்டும் என்ற சரத்தை றோமாவுடனான தனது ஒப்பந்தத்தில் உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### மைலோ புட்ஃபோல் சம்ப்ஸ் 2024 – வட மாகாணத் தொடரின்

## வவுனியா மாவட்ட தகுதிகாண் போட்டிகள் நாளை

மைலோ புட்ஃபோல் சம்ப்ஸ் 2024 வட மாகாணத் தொடரின் வவுனியா மாவட்டத்துக்கான தகுதிகாண் போட்டிகளானவை மாநகர சபை மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

இதன்போது, 10, 12 வயதுகுட்பட்ட இரு பாலருக்குமான போட்டிகளில், ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் முதல் 4 இடங்களைப் பெறும் பாடசாலைகள் மாகாணப் போட்டிக்குத் தெரிவாகவுள்ளன.

இப்போட்டிகளில் 750 மாணவர் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 08, மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.